# காஞ்சி

விலை 20 காசு

4—6

3-9-67



# குடியாட்சி வித்து!

**********

கோவை மாவட்டத்தில் கோபி செட்டிப்பாளையம் என்பது —1967 பொதுத் தேர்தலுக்கு முன்பு— அவ்வளவாக — யாருக்கும் விளம்பரம் ஆகாத ஊர்!

பெரிய பெரிய மாளிகைகள்போல் வீடுகளைக் கட்டிக்காத்து வருகின்ற விருந்தினரை மகிழ்ச்சிப் பொங்க வரவேற்றுப் பெருமைப்படுவதில் அந்தப் பகுதிப் பெருமக்களுக்குத் தனியான பாரம்பரியம் உண்டு! கொங்கு நாட்டு மக்களின் மாண்பும் மாட்சியும், முழு அளவு இழை பின்னி ஓடும் பகுதி, கோபி வட்டாரம்!

எளிமையைப் பாழ்படுத்தாத அழகுணர்வும், அடக்கத்தை இழக்காத வீர உணர்வும் பெற்றுத் தமிழகத்தின் சராசரி ஊர்களில் ஒன்றாக விளங்கிய கோபி, கடந்த பொதுத் தேர்தலில் அகில இந்தியாவிலும் பெரும்புகழ் பெற்றுவிட்டது. முன்னாள் மத்திய உணவு அமைச்சரும், இந்நாள் காங்கிரசுக் கட்சியின் பிரச்சாரகருமான திரு. சி. சுப்பிரமணியம் அவர்களை. சாதாரண கழகத் தோழர் பி. ஏ. சாமிநாதன் அந்தத் தொகுதி பாராளுமன்றத் தேர்தலில் தோற்கடித்தார்!

பொள்ளாச்சியில் அவரைப் போடுவார்கள் — அவரும் அங்குதான் போட்டியிடுவார் — என்று எதிர்பார்த்து, கோவை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் திரு. ப. நாராயணன், தோழர் சுப்பிரமணியத்தைத் தோற்கடித்துக் காட்டுவதாக ஊருக்கும் உலகுக்கும் அறிவித்தார்.

'இரும்பு மந்திரி—உணவு மந்திரி' என்று உலகப் புகழ் பெற்ற ஒருவரை எதிர்ப்பதற்கு, 'பணமோ அல்லது அது சம்பந்தமான பரிவாரப் பலமோ தேவை இல்லை' என்று அடித்துச் சொல்லித் தேர்தல் களத்திற்குத் தம்மைத் தயார் செய்துகொண்டிருந்த நாராயணன் அவர்களைப் பார்த்து கழகத்தோழர்களே வியந்ததுண்டு! சுப்பிரமணியத்தையாவது ...சாதாரண தி. மு க, மனிதர் ஜெயிப்பதாவது...' என்று காங்கிரசுத் தோழர்கள் சென்னை மேடைகளில் கர்ச்சனை செய்ததும் அனைவரும் அறிந்ததே!

பொள்ளாச்சியின் தேர்தல் நிலவரம் சென்னை நகரத்துத் தெருக்களில் காங்கிரசுத் தோழர்களால் 'சாங்கோபாங்கமாக' விமர்சனம் செய்யப்பட்டது! இந்த நாராயணன் அல்ல—அந்த வைகுண்டத்து நாராயணனே வந்தாலும் என்னை ஜெயிக்க முடியாது' என்று சுப்பிரமணியமேகூட சூளுரைத்தார்!

கடைசியில் பொள்ளாச்சித் தொகுதி இருந்தது; கழகத்து நாராயணன், அதே உறுதியோடும் உற்சாகத்தோடும் தேர்தல் போட்டிக்குத் தயாரானார்! ஆனால் சுப்பிரமணியத்தை அந்தத் தொகுதியில் திடீரெனக் காணோம்! தோழர் நாராயணனுக்கு அவர் பயந்துவிட்டாரா —அல்லது, 'கோபிக்குக் கொஞ்சம் விளம்பரம் வாங்கிக் கொடுப்போமே' என்று முடிவு செய்து விட்டாரா என்பவை இதுவரையில் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை!

காங்கிரசுப் பெருந் தலைவர்கள் என்று கருதிக் கொண்டிருக்கும் சிலருக்கு, உலகம் அனைத்தும் தேர்தல் தொகுதி என்பதில் சந்தேகமே இருந்ததில்லை! காமராசர், மாஸ்கோவின் ஒரு பகுதியில்கூடப் போட்டியிட்டிருப்பார்! 'மாஸ்கோவில் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்குத் தமிழகச் சட்டமன்றத்தில் இடங் கொடுக்கப்படுமா' என்கிற சட்டப் பிரச்சினைதான், அவரை விருதுநகரில் போட்டியிடச் செய்ததாம்!

விருதுநகரில் அவர் போட்டியிட்டது, தாம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமே என்பதற்காக அல்ல— எங்கு போட்டியிட்டிருந்தாலும் அமோகமான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்படும் கவுரவம் அவருக்கு அப்போது இருந்ததாகக் காங்கிரசுப் பரிவாரங்கள் தெருவுக்குத் தெரு ஊளையிட்டுக் கொண்டிருந்தன! காமராசரும் அப்படித்தான் நம்பினார்!

விருதுநகருக்குப் பெருமை அளிப்பதற்காகத்தான் அவர் அங்கு போட்டியிட்டாரே தவிர, வேறுவிதமாக வெற்றியில் அவருக்குத் துளியும் சந்தேகமே இல்லை!

விருதுநகருக்கு அவர் பெருமை தேடித் தந்தாரா என்பதில் கருத்து மாறுபாடுண்டு; ஆனால் அந்த நகருக்கு நல்ல விளம்பரம் கிடைத்தது மட்டும் உண்மை!

அதேபோல், சுப்பிரமணியம் அவர்களும், 'பொருள்கள் விலையாவதற்குப் பேர்போன சந்தையுள்ள பொள்ளாச்சியில் நாம் விலை போக மாட்டோம்' என்ற கிலியின் காரணமாகவோ—அல்லது, அந்த வைகுண்டத்து நாராயணனைக் காட்டிலும் உடுமலை நாராயணனுக்கு உடும்புப்பிடி போடுவதில் உள்ள சாமர்த்தியத்தைத் தெரிந்துகொண்டோ — கோபித் தொகுதிக்குத் தாவி விட்டார்!

கோபித் தெருக்களில் தோற்கடிக்கப்பட்டதற்குப் பிறகு அவர், 'காவி உடுத்திவிடுவார்' என்று நாம் எதிர்பார்க்கவில்லை! ஆனால் இப்போது அவர் போகும் போக்கைப் பார்த்தால் அற்பத்தனத்தின் அடி ஆழம் வரை சென்று, அங்குள்ள காவிநிற மண்ணை எடுத்துத் தம் முகத்தில் அப்பிக்கொள்ளும்வரை அவர் ஓயப் போவதில்லை எனத் தெரிகிறது!

போகட்டும்! கோபியில் தோற்றுப் போனவரின் 'கோபதாபங்கள்' தமிழகத்தை ஒன்றும் செய்துவிட முடியாது! சுப்பிரமணியத்தைக் காட்டிலும் தமிழகம் மிகப் பெரிது! பெரிய மனிதராக வளர்ந்துவிட்டவரைக் காட்டிலும், பெருந்தன்மையே தனக்கு முக்கியம் என்று முடிவு செய்துவிட்ட கோபி பகுதியை தமிழகத்தின் சனநாயகச் சரித்திரம் தனித்த புகழுரைகளால் சிறப்பிக்கத் தவறப் போவதில்லை!

இந்தப் புகழுரைகள் தொகுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இதே நாட்களில், அந்தப் பகுதியிலிருந்து அறிவிக்கப்பட்டிருக்கும் ஒரு செய்தி, நம்மைப் பெருமைக் கடலில் ஆழ்த்தித் திக்குமுக்காட வைக்கிறது!

கொங்கு மண், இனித் தங்க மண் ஆகிவிடத் தீர்மானித்து விட்டிருக்கிறதா? பொருள் புழக்கத்தின் கூடவே புகழ்ப் பெருக்கத்தையும் அது குவித்துக்கொள்ள முனைந்துவிட்டதா? முடியரசர் காலத்தில் முக்கியமான இடத்தை வகிக்காது போன ஆத்திரத்தைக் குடியரசுப் பாரம்பரியத்தில் தணித்துக்கொள்ளத் துவங்கிவிட்டதா?

இருக்கலாம்; கொங்குநாட்டு மண்வளம் கழகத் தோழர்களின் மனவளத்தோடு இணையுமானால், எத்தகைய அற்புதங்களுக்கு வழி

(4-ம் பக்கம் பார்க்க)

**மறுபடியும் செய்யாதே!**

அசட்டுத்தனமான பெருந்தவறு ஏதுமே செய்யா திருந்திருந்தால்தான் வாழ்க்கையில் வெற்றி காண முடியும் என்பதில்லை; அதே தவறுகளை இரண்டாம் முறையும் செய்யாதிருந்தாலே போதும் — வெற்றி கிடைத்துவிடும்.

H. W. ஷா

காஞ்சி

ஆண்டுசந்தா ரூ 10    அறுமாதம் ரூ 5.

மலர் 4    3 9-67    இதழ் 6

# கிராக்கிப் படி - போர்?

மத்திய அரசு ஊழியர்களது கிராக்கிப்படி போரும், அதன் காரணமாகக் கிளப்பப்பட்ட வேலை நிறுத்த அச்சுறுத்தலும் ஒருவாறாக ஒரு முடிவுக்கு வந்துவிட்ட தானது, ஒரு வகையில் ஆறுதலளிப்பதாக இருக்கிறது.

திட்ட நடைமுறைகளினாலும், அமிதலாபநோக்கக் குறுகிய மனப்பான்மையினாலும் விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போவதும், அதன் காரணமாக வாழ்க்கைச் செலவுப்புள்ளி தன் எண்ணிக்கையில்கூடிக்கொண்டே செல்வதும், அதனால் அரசு ஊழியர்கள் ஒவ்வோர் ஆண்டும் ஊதிய உயர்வு கோருவதும் கொடுபடும் உயர்வால் மீண்டும் விலையேறுவதும், ஒரு சங்கிலித் தொடர்பாக — சுற்றுவட்டமாக ஆகிவருவது என்பது இயல்பாகிவிட்டது.

வாழ்க்கைச் செலவுப்புள்ளி உயர்வதைக் காரணம் காட்டி, தங்கள் படித்தொகை உயர்த்தப்படவேண்டும் என்று கேட்பதற்கும் தரத்தவறினால் வேலை நிறுத்தம் போன்ற அச்சுறுத்தல்களைக் கிளப்புவதற்கும் அரசு ஊழியர்களுக்கு வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி—நிர்ப்பந்தப்படுத்தி ஊதிய உயர்வு பெற்று வருகிறபோது அதனால் மீண்டும் விலைவாசி உயர்வதனை பிற தனியார்துறை நிறுவன ஊழியர்களும், சாதாரண பொதுமக்களும் 'விதியே' என்று ஏற்றுத் தீரவேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுவிடுகிறது. இத்தகையோர்களது குறைகளை எடுத்துச் சொல்ல அரசியல் கட்சிகள் சில முயன்றாலும், அவற்றின் குரலுக்கு உரிய மதிப்புக் கிடைப்பதில்லை; கிடைக்கவும் வழியில்லை.

இதனால் ஒவ்வொரு முறையும், அரசு தன் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கிறபோது அதனால் தனியார் நிறுவன ஊழியர்களும், பொதுமக்களும் கூடவே பாதிக்கப்படுகிறார்கள். மிகக் குறுகிய அளவு சதவீதமுள்ள அரசு ஊழியர்களது ஊதிய உயர்வு-பல சதவீத மக்களைப் பாதிக்கவே செய்கிறது.

தன் நிருவாக இயந்திரம் சீராகச் செயல்பட்டுத் தீரவேண்டும் என்கிற அக்கறை அரசுக்கு இருப்பதே போல, தங்கள் குடும்ப இயந்திரமும் இயங்கவேண்டும் என்ற பொதுமக்களது அக்கறைக்குப் போதிய 'ஆதரவு' கிடைப்பதும் இல்லை.

இதனாலேயே துணைப் பிரதமர் மொரார்ஜிதேசாய் அவர்கள், இவ்விவகாரத்தில் ஒரு தற்காலிகத் தீர்வு காணும் வகையில், விலைவாசி ஊதியம், லாபம், டிவிடெண்டுகள் அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு முடக்கிவைத்து ஏககாலத்தில் விலை உயர்வைத் தடுக்கவும், பங்கு பேரத்தினால் ஏற்படுகின்ற பொருளாதாரச் சீரழிவை ஒரு கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரவும், ஊதிய உயர்வால் விலையேறுவதைத் தடுக்கவுமான ஒரு சீரிய திட்டத்தை வகுத்திருந்தார்.

ஆனால், அரசு ஊழியர் பிரதிநிதிகளுக்கும் துணைப் பிரதமருக்கும் ஏற்பட்ட பேச்சு வார்த்தையின் அடிப்படையில், மத்திய அரசின் அத்திட்டம் ஒருவாறாக முடங்கிப் போய்விட்டது.

கிராக்கிப் படியின் ஒரு பகுதியை செப்டெம்பர் முதல் ரொக்கமாகக் கொடுக்க ஒப்புக்கொண்டு விட்டதன் மூலம், மீண்டும் விலைவாசிகள் ஏறத்தான் போகின்றன — சாதாரண மக்கள் பாதிக்கப்படத்தான் போகின்றனர்.

அதே வேளையில் மாநில அரசு ஊழியர்களும் இனி தங்கள் போர்க் குரலை உயர்த்தத்தான் செய்வார்கள். அப்போது இன்னொரு முறை சில புள்ளிகள் வரையில் விலைகள் உயரத்தான் போகின்றன.

கிராக்கிப்படி அறிவிப்பு வெளியாகு முன்பு, தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கோவையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது, விலைவாசி உயர்வுப் பிரச்னைக்கு ஒரு முடிவு கண்டுவிட்டு, அதன்பின் இது போல செய்வதுதான் வரவேற்கத்தக்கது என்ற கருத்துப்பட பேசி இருக்கிறார்கள்.

ஊதிய உயர்வு கொடுக்கச் சம்மதித்துவிட்ட பின்னர், திரு. மொரார்ஜி அவர்களும், அடுத்து விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் அவசியம் பற்றிக் கருத்துக் கூறி இருக்கிறார். தம் முன்னைய திட்டம்போல் ஊதிய உயர்வு–விலைவாசி ஏற்றத் தடுப்பு–லாபம்–டிவிடெண்டுகளை ஒருசேரக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்துவிட்டிருந்தால், அந்த விவகாரத்தில் பிற எல்லா மாநில அரசுகளின் ஒத்துழைப்பும் நாடி செயல்பட முனைந்திருந்தால் ஓரளவு அத்திட்டம் வெற்றி பெற வாய்ப்புப் பெற்றிருக்கக்கூடும்.

இனி அதுபற்றிப் பேசியோ, வாதித்தோ பயனேதும் ஏற்படப் போவதில்லை. ஆகவே, திரு. மொரார்ஜி அவர்கள், உடனடியாக விலை உயர்வுத் தடுப்புக்கான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொண்டாக வேண்டும்.

அது ஒன்றுதான் கேட்பாரற்ற நிலையிலிருக்கும் இந்தியத் துணைக் கண்டத்து மக்களின் சோகவாழ்க்கைக்கு ஒரு 'ஆறுதல்' நடவடிக்கையாக இருக்கும்! எதிர்பார்ப்போம்!

✻

௨- பக்கத் தொடர்ச்சி

கோலும் என்பதை, கோபி வட்டத்தின், புஞ்சைப்புளியம்பட்டி கழகக் கிளை போட்ட தீர்மானம் தெள்ளத் தெரிவிக்கிறது.

''சனநாயகத்திற்கு ஏதோ விளக்கங்களைச் சொல்லும் வித்தகர்களே—உங்கள் விளக்கங்கள் அப்புறம் இருக்கட்டும்; எங்கள் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் சாதாரணத் தம்பிமார்களில் சிலர் சேர்ந்து எடுத்துள்ள முடிவைச் சீர்தூக்கிப் பாருங்கள், ஐயா! கழகத் தோழர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சனநாயகப் பயிற்சி அவர்கள் வாழ்வோடு கலந்துவிட்டதைக் காணுங்கள் ஐயா! அறிஞர் அண்ணா அவர்கள் எத்தகு பண்பையும் பாரம்பரியத்தையும் இங்கு வளர்த்து வருகிறார் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள் ஐயா''

என்றெல்லாம் புஞ்சைபுளியம்பட்டி கிளையின் தீர்மானத்தைப் படித்த பிறகு உரத்துக் கூவவேண்டும் என்று நமக்குத் தோன்றுகிறது!

சோஷலிசம்—சனநாயகம் என்பகளை ஏட்டில் எழுதிவைத்துக் கொண்டு இருபதாண்டுக் காலமானாலும் படித்துச் சொல்வோமே தவிர, செயலில் இறங்கமாட்டோம்; ஏனென்றால், எமக்குப் பிரச்சார விளம்பரம் தேவையே தவிர செயல் அல்ல—என்று தெரிவித்துக்கொண்டிருக்கும் காங்கிரசுக் குருடர்கள், புஞ்சைபுளியம்பட்டி கழகக் கிளை தீர்மானத்தைப் படிக்கட்டும்! முதலமைச்சர் ஆன பிறகும் அறிஞர் அண்ணா அவர்களின் தேர்வுக்குத் தடைக்கல்லாக நிற்கத் துணிந்த காங்கிரசு அறிவிலிகள், சாதாரண பேரூராட்சி மன்றத் தேர்தலில், கழகத் தோழர்கள் காட்டிக்கொள்ளும் கண்ணியத்தைக் கண்டு தலை குனியட்டும்!

அந்தக் கண்ணியமான செய்கை இதுதான்:—

புஞ்சை புளியம்பட்டி பேரூராட்சி மன்றத்தில் மொத்தம் 11 இடங்கள்; அவற்றில் இரண்டு இரட்டை உறுப்பினர் வார்டுகள்; மொத்தம் உறுப்பினர் 13 பேர்.

கடந்த 30—1—65-ல் நடைபெற்ற ஊராட்சித் தேர்தலில், இருக்கும் 13 இடங்களிலும் கழக உறுப்பினர்களே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இதுபோன்ற நிலை காங்கிரசுக் கட்சிக்கு வாய்த்திருக்குமானால், புஞ்சைப் புளியம்பட்டித் தேர்தலையே கொட்டி முழக்கிப் பேசி, 'தமிழகமே அந்த ஊர்தான்' என்று கொக்கரித்து, மக்களின் காதுகளைப் பஞ்சாக்கி இருப்பார்கள்! கழகத் தோழர்களின் அடக்க உணர்வு அத்தனை இடங்களைப் பிடித்தும், குதியாட்டம் போட்டு விளம்பரப்படுத்திக் கொள்ள முடியவில்லை!

13 உறுப்பினர்களில் 2 பேர்—2, 11-வது வார்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட கழக உறுப்பினர்கள் இயற்கையெய்திவிட்டார்கள். காலியான அந்த இரு இடங்களுக்கும் 30—8—67-ல் இடைத்தேர்தல் நடைபெறவிருக்கிறது. இந்த இடைத்தேர்தலில் கழகம் போட்டியிடாமல்— எதிர்க்கட்சிகள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென விரும்பி—அந்த ஊர்க் கழகக் கிளை முடிவெடுத்திருக்கிறது. இருக்கும் 13 பேரும் கழகத் தோழர்களாக இருப்பது சனநாயக வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லை. ஆகவே, இரண்டு பேராவது எதிர்க் கட்சியினர் இருந்தால்தான் நிர்வாகம் ஒழுங்குற நடப்பதற்குத் தூண்டுகோலாக அமையும் என்று அந்த ஊர்த் தோழர்கள் கருத்தறிவித்து முடிவெடுத்திருக்கின்றனர்.

ரூசோ எழுதிய—மில் விளக்கிய—ஜெபர்சன் பரிசோதித்த சனநாயகம்; இங்கு சாதாரணமாக நடைமுறைப் படுத்தப்படுகிறது!

புஞ்சைப் புளியம்பட்டி கிளையின் தீர்மானம், எதிர்காலத் தமிழகத்து சனநாயக வாழ்வின் குறிப்பிடத்தக்க இலக்கியம். அறிஞர் அண்ணா அவர்கள் இத்தனை நாள் பாடுபட்டுத் தமது தம்பிமார்களைப் பயிற்றுவித்த உழைப்புக்கு விலைமதிக்கவொண்ணாத சான்று அது!

புஞ்சைப் புளியம்பட்டி கழகத் தோழர்களைப் பாராட்டுகிறோம்! சாதாரண இடங்களிலும் சனநாயகத்தைக் காக்கத் துடிக்கும் கழகத் தோழர்கள், பெரிய இடங்களில் அதைப் பேணிக் காப்பதற்கு எவ்வளவு கவனம் எடுத்துக் கொள்வார்கள் என்பதைப் புஞ்சைப் புளியம்பட்டியிலிருந்து வரும் செய்தியிலிருந்து உலகம் தெரிந்து கொள்ளட்டும்!

—தோழன்.


**வாய்வு சூரணம்**

மலச்சிக்கல் மலக்கட்டு, பித்த உஷ்ண வாய்வு, கை கால், இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு, செரியாமை, வயிற்று வலிக்குச் சிறந்தது.
160 கிராம் டின் ரூ. 4—00

**பூபதி எண்ணை**

இருமல், இளைப்பு, ஏங்கல், குத்தல், வரட்டு, புகைச்சல், இருமல், மழைப் பனிக் காலங்களில் வரும் இரைப்பு, மேல் மூச்சு, குணம் செய்யவல்லது.
புட்டி ரூ 7—50

**கக்குவான் மருந்து**

முதல் நாளிலேயே கக்குவான் கிருமிகளை வெளிப்படுத்தி நோயைக் கட்டுப்படுத்தி விரைவில் குணம் செய்யவல்லது.
புட்டி ரூ. 2—00

**வீரகேசரி மாத்திரை**

ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும் உறுப்புக்கு உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்.
100 பில்ஸ் ரூ. 25 50—ரூ. 13, 24—ரூ. 7.

**S. V. R. சன்ஸ் R. I M P வாய்வுசூரணம் டிப்போ**
**கர்மன்ன செட்டியார் ரோடு அரிசிப்பாளையம். சேலம்-9**

நேரில் பெற:-
அமிர்தலால் & கோ. 146, கொண்டியப்ப நாய்க்கன் தெரு, சென்னை-3.
ராஜா மெடிகல் ஹால், 31, தர்மராஜா கோவில் தெரு பெங்களூர்.1 (கண்.)
E. வல்லரசு நாடார் & சன்ஸ். 188 A. தாராவி ரோடு பம்பாய்-17.
சொக்கநாத செட்டியார் மருந்துக் கடை திருப்பாபுலியூர் கடலூர் N T
ஆத்மஜோதி நிலையம். நாவலப்பிட்டி, சிலோன்.

# பிர்லா மாளிகையின் மர்மங்கள்;

# இரண்டாம் பாகம்?

கடந்த ஆகஸ்ட் 18-ம் தேதி பம்பாயில் உள்ள பிர்லா சகோதரர்களின் அலுவலக மாளிகையில் அவசர அவசரமாக ஒரு பத்திரிகையாளர் கூட்டம் கூட்டப்பட்டது.

பிர்லா நிறுவனங்களின் பிரதம அதிகாரி மண்டேலியா, 'தவருனதும் குழப்பமானதுமான பல குற்றச்சாட்டுகளை தவறென்று விளக்கவே உங்களை அழைத்தேன்'' என்ற அறிமுகத்துடன் துவங்கி பாராளுமன்றங்கள் முதல் பத்திரிகைத் தலைப்புகள் வரை அண்மைக் காலமாக வெளிவந்த சில திடுக்கிடும் தகவல்களில் அக்கறை செலுத்தியிருக்கிருர்.

> கொள்ளை இலாபம்-அரசியலில் குறுக்கீடுகள் — பழுதுபட்ட உற்பத்திப் பொருள்கள் — பதுக்கல் கணக்குகள் — வருமானவரி ஏமாற்றுதல்கள் — அமைச்சரவையில் சலுகைகள்

— இப்படிப்பட்ட பலதர குற்றச்சாட்டுகளுக்கு அண்மைக் காலமாக ஆளாகியிருக்கும் இந்தியாவின் இரண்டாவது ஏகபோக நிறுவனமான பிர்லா குடும்பம் ஒரு 'தேசிய சொத்து'' என்ற பரந்த விளக்கத்தை அந்த அதிகாரி தெரிவித்திருக்கிருர்.

மக்கள் அவை — மாநிலங்கள் சபை—பத்திரிகைத் தலையங்கங்கள் ஆகியன எழுப்பிய குற்றச்சாட்டுகளுக்கு நேரிடையாக மறுப்பும் விளக்கமும் அளிக்க முடியாத அவர் மாருக அவற்றின் மீதெல்லாம் கொதிப்பையும் காழ்ப்பையும் காட்டும் வகையில்,

> ''பிர்லா நிறுவனங்களைச் சாப்பிட்டுவிடலாம் என்று எவரும் நினைக்கவேண்டாம்; பிர்லாக்கள் ஜீரணிக்க முடியாதவர்கள்!

என்று எச்சரிக்கை கலந்த அறிவிப்பைத் தந்திருக்கிருர்.

சுமார் இருபதாண்டுகளுக்குமுன் பெரியார் அவர்களின் 'பிர்லா மாளிகையின் மர்மங்கள்'' என்ற புத்தக விற்பனையின் மூலம் ஏற்பட்ட பரபரப்பு இப்போது மீண்டும் நாடு பூராவும் தோன்றியுள்ளது.

பிர்லாவின் சம்பளப் பட்டியலில் மத்திய அமைச்சரவையைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் சிலர் இருக்கிருர்கள்.

—என்ற குற்றச்சாட்டு மக்கள் சபையில் புகாராகவும் பிரத அமைச்சருக்கு எழுத்து மூலமாகவும் தரப்பட்டது. அதுபற்றி அனைவரும் கேட்டுக்கொண்ட வகையில் விசாரணையை அமைக்காது கட்சியிலிருந்த சிலர் கொடுத்த தீர்ப்பினையும் வெளியே சொல்லாமல் ''அமைச்சர்களில் அதுபோல் யாரும் பிர்லாவிடம் ஊதியம் பெறவில்லை'' என்று இந்திரா மழுப்பலான பதிலைத் தந்தார்.

---

## எஸ். ஆர்.

---

அதற்குப் பின்னர், பிர்லாவின் தொழில் நிறுவனங்கள் பற்றிய டாக்டர் அசாரியின் அறிக்கை வெளியானபோது காங்கிரஸ் கட்சியிலேயே ''அப்படியா'' என்று பரபரப்பு எழுந்தன.

> தொழில் ஆதிக்கம்
>
> பொதுப்பணத்தில் நிறுவனங்கள் வளர்ச்சி
>
> லைசென்ஸ் பெறுவதில் சலுகைகள்
>
> முதல் இல்லாமலேயே தொழில்கள் துவக்கம்

இப்படிப்பட்ட திடுக்கிடும் தகவல்களை பிர்லாவின் சாம்ராஜ்யத்தினைப் பற்றி டாக்டர் அசாரி தனது அறிக்கையில் தந்தார்.

அந்த அறிக்கையின் முதல் பகுதியில் காணப்பட்ட பயங்கர குற்றச்சாட்டுகளின் விளைவினுல் அவர் தனது அறிக்கையின் இரண்டாம் பகுதியினை வெளியிடுவதில்கூட வற்புறுத்தல்கள் — எச்சரிக்கைகள் காட்டப்பட்டதாக ஒரு செய்தி வந்தது.

அதனையும் தொடர்ந்து மூன்று மாதங்களுக்குமேல் நடந்து முடிந்திருக்கும் பாராளுமன்ற — மாநிலங்கள் அவை நிகழ்ச்சிகளில் ஏறக்குறைய ஏதாவது ஒரு தலைப்பில் பிர்லா விவகாரம் பேசப்பட்டிருக்கிறது.

பிர்லா நிறுவனங்களின் 'விஷமங்கள்''—''தவறுகள்'' குறித்து கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் முதல் சுதந்திரா அங்கத்தினர்கள் வரை எல்லா தரப்பினருமே விவாதம் எழுப்பியிருப்பது ஒன்றே பிரச்னை எந்த அளவு கட்சி வரம்பு கடந்து அணுகப்பட்டிருக்கிறது என்பதனைக் காட்டுகிறது.

இந்தியாவின் பிரதம ஏற்றுமதி இறக்குமதி அதிகாரி (சீப்ஃ கண்ட்ரோலர் ஆப்ஃ இம்போர்ட் அண்ட் எக்ஸ்போர்ட்ஸ்) தனது குறிப்பு ஒன்றில்,

> ''பிர்லா நிறுவனங்களின் நடவடிக்கைகள் சந்தேகத்துக்கு இடம் அளிப்பவையாகவே இருக்கின்றன''

என்று தெரிவித்திருப்பதும் பாராளுமன்றத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

இவ்வாறு தொழிலாதிக்கத்தில் ஏகபோக வளர்ச்சியினைப் பெற பிர்லா நிறுவனம் துவக்ககால முதற்கொண்டே அரசாங்க நிறுவனங்கள்—அலுவலகங்களில்—ஆக்டபஸ் என்னும் கடல் சிலந்திபோல் ஊடுருவிப் பாய்ந்திருக்கிறது.

வேடிக்கை பார்க்க வந்தவர்களின் பையிலிருந்தே வேண்டிய பொருளைத் தருவித்துக் காட்டும் செப்பிடுவித்தைக்காரனைப்போல அரசாங்க இரகசியக் குறிப்புகள் ஒரு இலாகாவிலிருந்து இன்னொரு இலாகாவினை அடைவதற்கு முன் வழியில் பிர்லாவின் பார்வைக்குப் படாமல் தப்புவதில்லை. இத்தகவல் மாநிலங்கள் அவையிலேயே ''வெட்கம்! வெட்கம்!'' என்று ஏகோபித்து குரல் முழங்க வெளியிடப்பட்டிருக்கிறது.

மாநிலங்கள் அவையிலேயே ஒரு நாள் கேள்வி நேரத்தின்போது அறுபது நிமிடத்தில் 57-நிமிடங்கள் பிர்லா நிறுவனங்கள்மீதான குற்றச்

(12-ம் பக்கம் க்பார்க)

### முன்னைய ஆட்சியில், நீதி நிலைதடுமாறியது! தான் எவ்வாறு செயற்படுத்தப்படுகிறோம் என்று குமுறியது! அதன் பலன்? அநீதி அழிந்து அந்த இடத்தில்.!

# மொட்டுக்குள் மலர்

—[ முல்லை. தென்னவன் ]—

"அநீதியை அழிப்பதுதான் நீதியா?

சட்டத்தின் துணைகொண்டு குற்றத்தைக் கண்டுபிடித்து குற்றவாளியைத் தண்டித்து சமூகம் தழைக்கச் செய்வது நீதி!

கொலைத்தொழில் செய்பவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிப்பது நீதி! ஆனால் போர்க்களத்தில் கொலைத் தொழில் புரிபவர்களை மாவீரர்கள் என்று உலகம் போற்றுகிறது. அந்த இடத்தில் நீதி செத்துவிட்டதா? ஒரு இடத்தில் அநீதி என்று கருதப்படுவது வேறு ஓரிடத்தில் நீதியாகக் கருதப்படுகிறது. நேரத்திற்கு நேரம் உருமாறும் மாரீசன் அவதாரம்தான் நீதியா?

உணவுப் பொருள்களைப் பதுக்கும் கள்ள வியாபாரிகளைத் தண்டித்து, விலையேற்றத்தைத் தடுத்து நிறுத்துவது அரசினர் நீதி. அந்த நீதி செவ்விய முறையில் செயல்படாத போது, ஆட்சியாளர்களிடம் விலையேற்றத்தை தடுத்து நிறுத்துங்கள் என்று கூறுபவர்கள் தண்டிக்கப்படுவதா? அதற்குப் பெயர் என்ன? அதுவும் நீதியா?

உலகம் என்ற மஞ்சள் காமாலைக்காரன், முலாம் பூசிய நாணயத்தைத் தங்க நாணயம் என்று கருதுகிறான். அப்படிக் கருதிக் கருதி ஏமாந்ததால், கடைசியில் செப்பு நாணயத்தைத் தவிர வேறு எதையும் நம்புவதில்லை. அதுபோலத்தான் சட்டம், அநீதியை நீதியாகக் கருதுகிறதா? மஞ்சள் காமாலைக் கண்படைத்தவன் நம்பலாம். மனச்சான்று படைத்த நல்ல கண்ணுள்ளவர்களும் நம்பவேண்டுமா?

ஆம்; நம்பத்தான் வேண்டும். சட்டம் அப்படித்தான் கூறுகிறது. சட்டம் படித்த–சட்டத்தைச்செயல் படுத்தவேண்டிய நீதிபதி அதற்கு அடிமை! ஆனால் சாட்சியத்தையும் சந்தர்ப்பத்தையும், செயலின் தன்மையையும், செயல் புரிந்தவர்களின் வயது, குணம், நோக்கம் உடல் நிலை கருதி ஒரு சில நேரங்களில் நீதிபதியின் நேர்மையான கண்ணோட்டத்தினால் ,சட்டம் அநீதி என்று பொரித்துவைத்ததற்குமாறாக நீதி வழங்கலாம்—வழங்கப்பட்டிருக்கிறது."

—தீர்ப்பு எழுதவேண்டிய நீதிபதியின் உள்ளம் நீதியைப்பற்றிய விளக்கமும், நீதியின் நன்மை தீமையையும், குறைபாட்டையும் நிறைபாட்டையும், அலசி ஆராய்ந்து கொண்டிருந்தது. அவரை அவ்வாறு செய்யத் தூண்டியது காலையில் அவர் விசாரித்த வழக்கு. அந்த வழக்கில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அவர் மனக்கண்முன் நிழலாடின.

* * *

"கனம் நீதிபதி அவர்களே!"

வெண்கல நாதம்போல் 'கணீர்' என்ற குரலைக் கேட்ட நீதிபதி நிமிர்ந்துபார்த்தார். உறையிலிருந்து விடுபட்ட உடைவாளைப்போல் பொற்செழியன் நின்றுகொண்டிருந்தான். வனப்பு மிகுந்த தாமரை மலரைப் பிடுங்கி வெயிலில் போட்டதுபோல் அவனுடைய வலிவும் வனப்பும் மிக்க உடல் பொலிவு குன்றிக் காணப்பட்டது. அவனுடைய தலையில் பெரிய 'பேண்டேஜ்' கட்டப்பட்டிருந்து. உடலிலிருந்து ரத்தம் சிந்தியதால் சோர்ந்து காணப்பட்டான். ஆனால் அவனுடைய முகத்தில் உறுதியும் உற்சாகமும் கலந்து காணப்பட்டது.

நீதிபதி அவனுடைய அழகிய முகத்தை உற்று நோக்கியபடி, "உன் பெயர்" என்றார்.

"'பொற்செழியன்!"

"தாலுகா ஆபீஸ்முன் கூடிநின்று அக விலையை அகற்றுவீர்! விலையேற்றத்தைக்குறைப்பீர்! பதுக்கலைக் கண்டுபிடியுங்கள்! வேலைக்குச்செல்லாதீர்" என்று கோஷமிட்டுக் கொண்டு, அலுவலகத்திற்குள் சென்ற அலுவலர்களைத் தடுத்தும், நிறுத்தி கல்லெறிந்து கலகம் செய்து, அரசினர் உடமைகளைச் சேதப்படுத்திய மூன்று குற்றங்கள் உம்மீது சுமத்தப்பட்டிருக்கின்றன. இத்தகைய குற்றங்களைச் செய்த குற்றவாளி, நீர்! என்பதை ஒப்புக் கொள்ளுகிறீர்களா?"

'இல்லை; நான் குற்றவாளி இல்லை!' பொற்செழியன் புன்னகை செய்தான்.

'வழக்காட விரும்புகிறீரா? வழக்கறிஞரை ஏற்பாடு செய்துகொள்ள விரும்புகிறீரா?'

'வழக்காட விரும்புகிறேன். வழக்கறிஞர் என் வழக்கிற்குத் தேவையில்லை. நானே வழக்காட விரும்புகிறேன்.'

'அப்படியானால் உமது வாக்கு மூலத்தைக் கொடுக்கலாம்' என்றார் நீதிபதி.

பொற்செழியன் வாக்கு மூலம் கொடுக்க ஆரம்பித்தான்.

அகவிலையை அகற்றுவீர்! விலையேற்றத்தைத்தடுத்து நிறுத்துங்கள்! வேலைக்குச் செல்லாதீர்' என்று நானும் இருநூறுக்கு மேற்பட்ட கழகத் தோழர்களும் முழக்கமிட்டுக் கொண்டு வட்ட அலுவலத்தின் முன் குழுமியிருந்தோம். பொதுமக்களுக்கும் அலுவலர்களுக்கும் எந்தவித தொந்தரவும் செய்யாமல் அமைதியான முறையில்—போராட்டம் நடந்துகொண்டிருந்தது. அப்பொழுது போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து, 'கலைந்து செல்லுங்கள்; நீங்கள் கூடியிருப்பது சட்ட விரோதச் செயல்' என்றார். நாங்கள் கலைந்து செல்ல மறுத்தோம். இன்ஸ்பெக்டரும் சில போலீஸ்காரர்களும் கூட்டத்தைக் கலைக்க லத்தியால் அடித்தனர். கூட்டத்திலுள்ளவர்கள் சிலர் மிரண்டு ஓடினர். நான் அவர்களில் சிலரை மறித்து, 'உயிர் என்ன வெல்லமா? நில்லுங்கள்!' என்றேன். என் வேண்டுகோள் பலன் கொடுக்க ஆரம்பித்தது. ஓடியவர்கள் என்னுடன் நின்றுகொண்டு உணர்ச்சியுடன் முழக்கமிட்டனர்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. கோபத்துடன் என்னை நோக்கி ஓடிவந்து, 'நீ என்ன பெரிய தியாகியா? உன்னைத் தியாகியாகவே மாற்றுகிறேன் 'பார்' என்று கூறிக் கொண்டு தடியால் என் தலையில் அடித்தார். சிலர் மறுபடியும் ஓட ஆரம்பித்தனர். நான் அசையாமல் நின்றுகொண்டு, 'அகவிலையை அகற்

றுவீர்! விலையேற்றத்தைத் தடுத்து நிறுத்துவீர்!' என்று முழக்கமிட்டுக் கொண்டிருந்தேன்.

இன்ஸ்பெக்டர் லத்தியால் என் தலையில் மாறி மாறி அடித்தார். என் மண்டையோடு உடைந்து இரத்தம் ஆறாக ஓடியது. நான் உணர்விழந்து விட்டேன். இரண்டுநாட்கள் சென்று மருத்துவ விடுதியில் இருப்பதை அறிந்தேன்.

நான்வட்ட அலுவலகத்திற்குமுன் சிலருடன் கூடி நின்று முழக்கமிட்டேன் — ஒத்துக் கொள்ளுகிறேன். என் சுயநலத்திற்காக அல்ல; ஏழைகள் அகவிலையால் பாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த! நான் எந்த அலுவலர்களையும் உடல் பலம் கொண்டு தடுத்து நிறுத்தவில்லை. அரசினர், பொதுமக்கள் உடமைகளுக்கு சேதம் விளைவிக்கவில்லை. இப்படிக் கூறுவதால் நான் தண்டனையிலிருந்து தப்பவேண்டும் என்ற எண்ணத்தால் அல்ல; நீதி சந்தி சிரிக்கக்கூடாது என்பதால்!

கனம் நீதிபதி அவர்களே! நீங்கள் வழங்கும் நீதியை மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுகிறேன். தண்டனையாக இருந்தால் மிகப் பெருமிதத்துடன் ஏற்றுக்கொள்வேன், அதுவே என் முழு விருப்பமும்கூட!

—பொற்செழியன் புன்னகையுடன் நீதிபதியை நோக்கினான்.

* * *

'கனம் நீதிபதி அவர்களே!'

முரட்டுக் குரலில் போலீஸ் இன்ஸ்பெக்டர் பேச ஆரம்பித்தார், நீதிபதி அவருடைய வாக்குமூலத்தை உற்றுக் கவனிக்க ஆரம்பித்தார்.

பொற்செழியனும் இருநூறுக்கு மேற்பட்ட நபர்களும் கைகளில் அட்டைகளை ஏந்திக்கொண்டும், கோஷமிட்டுக் கொண்டும் தாலுகா ஆபீசின் உள்ளே நுழைபவர்களைத் தடுத்துக்கொண்டிருந்தனர். கலகம் ஏற்படும்நிலை உருவாகிக்கொண்டிருந்தது. அதைத் தடுத்து நிறுத்துவது ஒரு போலீஸ் அதிகாரியின் கடமை.

எனவே, நான் அவர்களைக் கலைந்து செல்லும்படிக் கேட்டுக் கொண்டேன். அவர்கள் மறுத்தனர். பொற்செழியன் வெறியுடன் உள்ளே செல்பவர்களை மறித்தான். அதனால் கலகம் ஏற்பட்டது. கலகத்தை அடக்கக் கூடியிருந்தவர்கள்மீது லேசாக 'லத்திசார்ஜ்' செய்தேன், கூட்டம் கலைந்து ஓடியது. பொற்செழியனும் ஓடினான். ஓடும்போது, கால்தடுக்கி கூர்மையான கல்லில் மோதி உணர்விழந்தான். அதனால் அவனை மருத்துவவிடுதிக்கு அனுப்பி வைத்தேன்.


விரைவில்!

## எஸ். எஸ். தென்னரசு

எழுதும்

# 'கண்ணாத்தாள்'

ஐம்பது ஆண்டுகளுக்குமுன் முகவை மாவட்டத்தில், செட்டி நாட்டுச் செம்மண் பூமியில், வாழ்ந்து மடிந்த ஒரு சுமங்கலியின் கண்ணீர்ப் பட்டயம்.


பொற்செழியனும் அவர்களுடைய தோழர்களும் அலுவலகத்தின் முன் கூடி நின்று கலகம் செய்ததால், அலுவலகப்பணி தடைப்பட்டது. இதுபோன்ற குற்றம் செய்யும் சமூகத் துரோகிகள் தண்டிக்கப்படாவிட்டால், சமூகத்தில் குற்றவாளிகள் தொகை அதிகப்படும். எனவே, கனம் நீதிபதி அவர்களே! குற்றம் செய்த பொற்செழியனைத் தண்டிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

இன்ஸ்பெக்டர் வாக்குமூலம் கொடுத்துவிட்டு, பெருமிதத்துடன் உட்கார்ந்தார்.

நீதிபதி போலீஸ் தரப்பு சாட்சிகளை விசாரணை செய்தார். அவர்கள் முன்னுக்குப்பின் முரணாக வாக்குமூலம் கொடுத்தனர்.

* * *

''கனம் நீதிபதி அவர்களே!''

—அரசினர் மருத்துவர் எழுந்து பேச ஆரம்பித்தார்.

நீதிப்தி அவரை நோக்கி ''பொற்செழியன் அடிபட்டது லத்தியாலா? கூர்மையான கல்லில் மோதியா?'' என்றார்.

''லத்தியால் அடிக்கப்பட்டிருக்கிறார். கல்லால் மோதியது என்றால் காயம் உள்நோக்கி ஆழமாகவும் மேல்புறம் அகன்றும் இருக்கவேண்டும். பொற்செழியனுக்கு ஏற்பட்ட காயம் ஒரே சீராக இருக்கிறது. அதுவும் தலையில் பல இடங்களில் இருக்கிறது, எனவே அவர் லத்தியால் அடிக்கப்பட்டார் என்பது உறுதி!''

''பொற்செழியன் உடல்நிலை இப்பொழுது எப்படி இருக்கிறது?''

''பொற்செழியனின் உடல்நிலை திருப்திகரமாக இல்லை. அதிக இரத்தம் வெளியேறியிருக்கிறது. லத்தி அடி மூளையில் பட்டிருக்கிறது. அதனால் அவருக்கு அதிர்ச்சி கொடுக்கும்எந்தசம்பவமோ, பேச்சோஅவர் உடல்நிலையை பாதிக்கச்செய்யும்; உயிரே இழக்கும்படியான நிலை உண்டாகலாம். அவர் முன்புஇருந்த நிலைக்கு வர நல்ல சத்துள்ள ஆகாரம் கொடுக்கப்படவேண்டும். அவ்வாறு செய்யத் தவறினாலும் அவர் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். இன்றைய அவரது உடல்நிலை சிறை வாழ்க்கைக்கு ஏற்றதல்ல. ஆனால் அவருடைய மனநிலையோ, தான் இந்த வழக்கில் தண்டிக்கப் படவேண்டும் என்றநிலை. அவர் மனநிலைக்கு மாறுபட்டநிலை ஏற்பட்டாலும், அவர் உயிருக்கு ஆபத்து ஏற்படும்'' என்று டாக்டர் கூறி அமர்ந்தார்.

* * *

காலையில் வழக்குமன்றத்தில் நடந்த வழக்கைப்பற்றிய நினைவிலிருந்து நீதிபதி விடுபட்டு, சுய உணர்வடைந்தார்.

நீதிபதியின் உள்ளம் ''பொற்செழியன் இளைஞன்; நேர்மையானவன்! இத்தகையவன் தேசப்பாதுகாப்பிற்குத் தேவைப்பட்டவன். ஆனால் உணர்ச்சி வயப்பட்டவன். அதனால் விலையேற்றக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறான்'' என்று எடைபோட்டது.

''அவன் அலுவகத்திற்கு முன் கூடி நின்றது உண்மை. அதற்குத் தண்டனை வழங்கவேண்டியது தான். ஆனால் அவன் உடல் நிலை,

சிறை வாழ்க்கைக்கு ஏற்றதல்ல! தண்டித்தால் சிறையில் வசதியின்மையால் இறந்துவிட்டாலும் விடலாம். அதனால் விடுதலை செய்வதா? என்னுடைய தீர்ப்பு நீதியைச் சாகடிக்கச் செய்வதா? கூடாது. கூடாது! அவன் அலுவலகத்தின் முன் கூடி நின்றதைத் தவிர. போலீஸ் இன்ஸ்பெக்டர் சாட்டிய குற்றங்கள் நிரூபிக்கப்படவில்லை. அதனால் அவனை விடுதலை செய்துவிடலாம். விடுதலையா? அவனுடைய மனநிலை தண்டனை கிடைக்காவிட்டாலும் உடல் நிலை பாதிக்கப்படும் என்று டாக்டர் கூறியிருக்கிறார். எப்படிச் செய்தாலும் அவன் உடல் நிலை பாதிக்கப்படும். இதென்ன சோதனை? நானும் குற்றவாளியை சட்டப்படி தண்டிக்க வேண்டும். நான் சட்டத்திற்கு அடிமை! அதனால் செய்துமுடிக்க வேண்டும்! எப்படி? எப்படி?''— நீதிபதியின் மனம் கொந்தளிக்கும் அலைகடலானது.

நீதிபதி தலையை இருகைகளாலும் இறுகப் பற்றிக்கொண்டு யோசித்தார். அரும்புக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் மலர்ச்சியை நீதிபதியின் முகம் திடீர் என்று. வாங்கிக் கொண்டது. பேனாவை எடுத்துத் தீர்ப்பை எழுத ஆரம்பித்தார்.

'போலீஸ் இன்ஸ்பெக்டர் சாட்டிய குற்றங்கள் அனைத்தும் நிரூபிக்கப்படவில்லை. சாட்சிகள் முன்னுக்குப்பின் முரணாகக் கூறியுள்ளனர். பொற்செழியன் அலுவலகத்தின்முன் நின்று முழக்கமிட்டிருக்கிறார். இச்செயல் குற்றமுடையது; எனவே அவருக்குத்தண்டனை வழங்கவேண்டியதுநீதி. ஆனால் டாக்டர் கூற்றுப்படி அவருடைய உடல் நிலை சிறை வாழ்க்கைக்கு ஏற்றதல்ல. பொற்செழியன் இளைஞர்; படித்தவர்; பண்புமிக்கவர்; நாட்டுப் பற்றுக் கொண்டவர். ஆனாலும் குற்றவாளி! அவருடை உடல் நிலையை அனுசரித்து அவருக்குக் கோர்ட் முடியும்வரை தண்டனை வழங்குகிறேன்' -என்று மொட்டிலிருந்து மலர் மலர்வதைப்போல், தீர்ப்பு வெளிப்பட்டது.

ஒரு இளைஞனின் உயிருக்கு ஆபத்து ஏற்படாத நிலையில்— தானும் நீதியினின்று வழுவாதமுறையில் குற்றவாளியைத் தண்டனை வழங்கிய பெருமிதம் அவருடைய முகத்தில் மிளிர்ந்தது!

●

# பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

****

## செப். 15 முதல் 22 வரை கொண்டாடுவீர்!

****

**பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் செப்டம்பர் 15.**

அந்த நாளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமது 58-வது வயதை முடித்து 59-ஆம் வயதினைத் தொடங்குகிறார்கள். தமிழ் நாட்டின் தற்போதைய சரித்திரமே—அதன் வாழ்வே — இந்த 59 வயது தலைவரின் தொண்டிலும் தியாகத்திலும் உருப்பெற்று வருவதை நாடு ஒப்புக்கொண்டுவிட்டது.

கழகத் தோழர்கள் கடந்த பல்லாண்டுகளாக பெருஞ் சிறப்போடும் அரிய ஏற்பாடுகளோடும் கொண்டாடி வரும் அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள் விழாவினை, இந்த ஆண்டில் மேலும் சிறப்பாகக் கொண்டாடுமாறு கழக அமைப்புக்களையும், சார்பு — துணை மன்றங்களையும், கழகத் தோழர்கள்—ஆதரவாளர்களையும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

செப்டம்பர் 15 முதல் 22-வரையுள்ள ஒரு வார காலத்தை அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள் விழா வாரமாகக் கொண்டு, நாள்தோறும் பொதுக் கூட்டங்கள் நடத்துதல்—ஏழைகளுக்கு உணவு அளித்தல்—பள்ளிச் சிறார்களுக்குப் பலகை புத்தகம், இனிப்பு வழங்குதல் ஆகியவைகளை மேற்கொள்ளுமாறுகேட்டுக் கொள்கிறோம்.

இயல்—இசை—நாடகம் எனும் முத்தமிழும் அந்த விழா வாரத்தில் நாடெங்கும் ஊர்கள் — தெருக்கள் — வீடுகள் தோறும் மாண்புற முழங்கட்டும். அந்த முழக்கத்தில், கழகக் கொள்கைகள் — அறிஞர் அண்ணா அவர்கள் சிறப்புகள்—பண்பு நலன்கள்—கழக அமைச்சரவையின் கடந்த ஆறுதிங்கள் சாதனைகள் ஆகியவைகளை அனைவரும் அறியும்வண்ணம் எடுத்துச் சொல்லிப் பரப்புமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

விழா வார நிகழ்ச்சிகளில், அறிஞர் அண்ணா அவர்கள் தம் வாழ்வில் ஆற்றியுள்ள தொண்டு—தியாகம் — சாதனைகள், அவர் தலைமைதாங்கும் கழக அமைச்சரவையின் சிறப்புமிக்க பணிகள்—திட்டங்கள், கழகக் கொள்கைகளின் அருமை—பெருமை ஆகியவைகளை மட்டுமே எடுத்துச் சொல்லும் வகையில் இடம் பெறுதல் வேண்டும் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

'அறிவகம்'
சென்னை-13
29—8—67

**என். வி நடராசன்,**
அமைப்புச் செயலாளர், தி. மு. க.

# ஒப்பிட்டால் புரியும்!

தி. மு. க. ஆட்சி எவ்வளவு நாள் நீடிக்கும் என்று கேட்கும் காங்கிரஸ்காரர்களே! மக்கள் விரும்பும்வரை நீடிக்கும்; தியாகம் புரிந்த எங்கள் தோழர்களுக்கு மதிப்பு இருக்கும் வரை நீடிக்கும்!

மார்ச் மாதம் ஆறும் தேதியன்று நாங்கள் பொறுப்பு ஏற்றோம்; இன்றோடு ஆறு மாதம்கூட முழுமை பெறவில்லை; காங்கிரசு இருபது ஆண்டுகள் ஆட்சிபுரிந்தது. காங்கிரசைவிட்டால் இந்த நாட்டை ஆள யாரும் கிடையாது என்று ஊரை நம்பவைத்தார்கள்—உலகத்தை நம்பவைத்தார்கள்—உண்மையைச் சொல்லப்போனால் என்னையும் நம்பவைத்தார்கள்.

ஏழை மக்களின் பெருமூச்சை மதிக்காமல் ஆள முடியும் என நினைத்த காங்கிரசார் வீழ்ந்தார்கள். இந்த வீழ்ச்சியைக் கண்டபின் காங்கிரசுத் தலைவர்கள் திடுக்கிட்டுத் திகைத்துப் போனார்கள்.

இப்போது வாய் திறந்துள்ளார்கள். தி. மு. க. ஆட்சி எவ்வளவு நாட்கள் நீடிக்கும் என்று கேட்கிறார்கள். நான் அவர்களுக்குக் கூறிக்கொள்வேன், இங்கே என் எதிரில் திரண்டுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் விரும்பும்வரை எங்கள் ஆட்சி நீடிக்கும். ஆக்கவும், அழிக்கவும் வல்லமை பெற்றவர்கள் மக்கள்தான்.

இந்த ஆட்சி எளிதாகக் கிடைத்ததும் அல்ல. எதிர்பாராமல் கிடைத்ததும் அல்ல. நமது தோழர்கள் இதற்காகச் சிந்திய கண்ணீர், ரத்தம் கொஞ்சமல்ல. தி. மு. க. ஆட்சி ஏழைகளின் ரத்தம், கண்ணீர், வியர்வை, ஆகியவற்றின் அடித்தளத்தில் நிர்மாணிக்கப்பட்டது. அந்த உண்மையான தோழர்களுக்கு மதிப்பு இருக்கும் வரை இந்த ஆட்சி இருக்கும்.

காங்கிரஸ்காரர்களே! இப்பொழுது என்னைத் திட்டுகிறீர்கள். இவ்வளவு நாளும் திட்டியது போதாதா? அப்படி உங்களிடம் என்னதான் திட்டுவதற்குப்பாக்கி இருக்கிறது? எந்த வார்த்தை மிச்சம் இருக்கிறது?

உலகத்தில் உள்ள அசிங்கமான பொருள்களோடு என்னை ஒப்பிட்டுப் பேசாததா? என் குடும்பத்தைக் காட்டி திட்டாததா? எனது நண்பர்களை இழிவுபடுத்தித் தாக்காததா? என்ன பாக்கி இருக்கிறது? நீங்கள் இவ்வளவு பேசியபின்தானே எங்களை மக்கள் ஆட்சியில் அமர்த்தி இருக்கிறார்கள்.

விக்கிரமாதித்தன் காடு ஆறு மாதம், நாடு ஆறுமாதம் என்று இருந்ததைப்போல, நீங்கள் ஆறுமாதம் பேசாமல் இருந்துவிட்டு இப்போது வந்து எவ்வளவு நாள் பதவியில் இருந்துவிடுவீர்கள் என்று கேட்கிறீர்கள். உலகம் உங்களை எள்ளி நகையாடாதா? நாங்கள் பதவியில் இல்லாமல் இருபது ஆண்டுகள் இருந்தோம். உங்களால் இருபது நாட்கள் இருக்க முடியவில்லையே!

இந்தக் காங்கிரசுக்காரர்கள் எவ்வளவு தூரம் அந்தப் பதவியை அனுபவித்தார்கள் என்பது அவர்களுக்குத்தான் தெரியும். பையில் நான்கு அணா வைத்துக்கொண்டு காப்பி குடிக்கச் செல்பவன் காசைத் தொலைத்துவிட்டால் அங்கும் இங்கும் அலைந்து தேடுவான். மற்றவர்கள் வந்து கேட்டாலும் எரிந்து விழுவான். அதேபோல் பதவியை இழந்த காங்கிரசுக்காரர்கள் எரிந்து விழுகிறார்கள்.

அவர்கள் இழந்தது என்ன? நான்கு அணா காசா? அரசாட்சி அல்லவா?

எங்களைப் பார்த்து என்ன செய்தீர்கள் எனக் கேட்டவர்களுக்கு ஒரு சில உதாரணங்களைக் கூறுகிறேன்.

காந்தியாரின் கொள்கையான ரூ. 500க்கு அதிகமாகச் சம்பளம் வாங்கக்கூடாது என்ற திட்டத்தை நாங்கள்தானே பின்பற்றுகிறோம். இது பெரிய விஷயம் இல்லாவிட்டாலும் மக்களோடு நாங்களும் வாழ்கிறோம் என்பதற்காகத்தான் கூறுகிறோம்.

'தமிழக அரசு தலைமைச் செயலகம்'' என்று தமிழில் பெயர்ப்பலகை போட்டு இருக்கிறோம். இது என்ன பிரமாதம் என்கிறார் பக்தவத்சலம். பிரமாதம் இல்லை. சிறிய விஷயம்தான். இந்தச் சிறிய விஷயத்தைக்கூட உங்களால் செய்ய முடியவில்லையே.

தர்மபுரி மாவட்டத்தில் எட்டு லட்சத்து அறுபது ஆயிரம் ஏக்கர் புன்செய் நிலத்திற்கு வரி விலக்கு அளித்திருக்கிறோம்.

சென்னையிலும், கோவையிலும் ரூபாய்க்கு ஒருபடி அரிசி போடுகிறோம். இதைப்பார்த்துவிட்டுக் காங்கிரசார் 'சென்னையில்தானே ஒருபடி அரிசி? சென்னிமலைக்கு எங்கே? கோவைக்குத்தானே ஒருபடிஅரிசி? கோவில்பட்டிக்கு எங்கே?'' என்று கேட்கிறார்கள். நான் கூறுகிறேன், நீங்கள் செய்ததைவிட நாங்கள் இந்தக் காரியத்தைத் தொடர்ந்து அமுல் நடத்துவோம்.

ஒரு ஆண்டில்கூட அல்ல சில மாதத்தில் தமிழகத்தின் பல பகுதிகளிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவோம்.

இந்த ஆண்டு அறுவடை நன்றாக இருக்கும் என்று நான் கூறியதற்கு சி. சுப்ரமணியம் ''அண்ணாதுரை மந்திரம் போட்டா உற்பத்தி செய்துவிட்டார்'' என்கிறார்.

எனக்கு மந்திரம் தெரிந்திருந்தால் 1967–குப் பிறகுதானா உபயோகித்து இருக்கவேண்டும். நாங்கள் மணிமுத்தாறு அணையைக் கட்டினோம் என்கிறீர்கள். சுப்ரமணியம் செங்கல் சுமந்தாரா? பக்தவத்சலம் சாந்து குழைத்தாரா? நீங்கள் திட்டம் போட்டுக்கொடுத்தீர்கள், தொழிலாளர்கள் சிறப்பாகக் கட்டினார்கள்.

இதேபோலத்தான் நாங்களும் நல்லரக விதை, உரம் ஆகியவற்றைக் கொடுத்தோம். விவசாயிகள் நன்றாக உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறார்கள் இதைப் புரிந்துகொள்ளாமல் சிறுபிள்ளைத்தனமாகப் பேசுவதா?

ஐந்துமாத காலத்தில் என்ன சாதித்தார்கள் என்று கேட்கிறார்கள், மைசூரில் காங்கிரசு ஆட்சி நடத்துகிறது. அவர்கள் சாதித்ததைவிட நாங்கள் அதிகமாகச் செய்திருக்கிறோம்.

ஆந்திரா, மகாராஷ்டிராவை எடுத்து நமது அரசுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். ஏன்? டெல்லியிலும் காங்கிரசு ஆட்சிதானே? அவர்கள் செய்ததையும் தி. மு. கழக அரசு செய்திருப்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் புரிந்துகொள்ளலாமே!

—தர்மபுரியில் முதலமைச்சர்.




## 3—17
## ‘தலைகள் இல்லை பா?’

மோசம் போய்விட்டோமா? நாமா? விபரீதம் என்ன நடந்தது மாரிமுத்து, விவரமாகச் சொல்லேன்!’ என்று குரலில் பயம் தெரிக்கத் தூமகேது கேட்டான்.

“நமது அரசர் மோசம் செய்து விட்டார்!’

“இவ்வாறு குனிந்த தலை நிமிராமலேயே மாரிமுத்து அழுத்தம் திருத்தமாகச் சொன்னான்.

“அரசனா? குலசேகர பாண்டியனா? மோசம் செய்துவிட்டானா?

“ஆமாம் ஒற்றர் நாயகமே, ஆமாம்! குலசேகர பாண்டியன் தான் துரோகம் செய்தவிட்டார்! யாருடைய ஆட்சி நிலைத்து நிற்க நீங்கள் அல்லும் பகலும் அயராது உழைத்து வந்தீர்களோ, அவரே தான் உங்களுக்குத் துரோகம் செய்துவிட்டார்!”

“புரியவில்லையே, மாரிமுத்து?”

“அதைச் சொல்லத்தானே விழுந்து அடித்துக்கொண்டு உங்களிடம் ஓடிவந்திருக்கிறேன்!”

‘சொல்! தாமதிக்காமல் சொல்!’

“ஏதோ செழிப்பாக இருக்கிறது, போனால் போட்டும் என்று யானை விட்டு வைக்கும் வரைத்தானே, கரும்புத் தோட்டம், கரும்புத்தோட்டமாக இருக்க முடியும்? யானைக்குச் சீற்றம் பிறந்து சரி, பார்ப்போம் ஒரு கை என்று உள்ளே நுழைந்து விட்டால்—கரும்புத் தோட்டத்தின் கதி என்னவாகும்? இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளாமல், நமது அரசர் தவருன வழியில் தாவிக் குதித்துப் பார்க்கிருர்! நீங்கள் மனம் வைத்தால், நாளைக் காலையே இந்தப் பாண்டிய நாடே சுடுகாடு ஆகிவிடாதா? யானை புகுந்த தோட்டத்திலாவது ஒன்றிரண்டு கரும்புகள் மீதமிருக்கும்! ஆனால் உங்கள் சீற்றம் விழுந்த நாட்டில் புல் கூடக் கருகிவிடுமே!’

‘அந்தப் புல்லன் அதை உணரத் தவறினால் செய்தேகாட்டிவிடலாம்; செய்தியைச் சொல் மாரிமுத்து!’

‘இலங்கை அரசன் பராக்கிரமபாகு, இதே பாண்டியனைச் சிறையில் அடைத்து வைத்திருந்தான் அல்லவா? இவரது சிரசை வெட்டி கோட்டையின் மீது வைக்கப்போவதாகவும் கொக்கரித்தான் அல்லவா? அத்தகைய வஞ்சகனோடு...’

‘ஏதாவது ஒப்பந்தம் செய்து கொண்டானா குலசேகரன்!’

‘ஒப்பந்தம்செய்துகொள்ளஅவன் முயற்சி செய்கிருன்! அந்த முயற்சிக்கு இவர் ஆதரவு தருகிருர்,’

“அப்படியா?’

“ஆமாம் ஒற்றர் நாயகமே! பராக்கிரமபாகு பரிசுகள் அனுப்பியிருக்கிருன்! அந்தப் பரிசுகளை நமது அரசர் ஏற்றுக் கொண்டார்!’

“உண்மையாகவா?”

‘நான் ஓடி வந்தது, பொய்யைச் சொல்ல அல்ல! உண்மையைத் தான் சொல்கிறேன் ஒற்றர்நாயகமே, உண்மையைத்தான் சொல்கிறேன்! பரிசுகள் வந்து இறங்கியதை, என்னிரு கண்களால் பார்த்துவிட்டு பதை பதைத்துப் போய்தான் ஓடி வந்தேன்!’

‘பயப்படாதே மாரிமுத்து, பயப்படாதே! பகைவனின் மகளான திருமேனியின் காதலில் எப்பொழுது அறிவை இழந்தானோ. அப்பொழுதே இப்படிப்பட்ட விபரீதங்கள் நேரிடும் என்று நான் எதிர்பார்த்ததுதான்! பாண்டியனின் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டிய ஒரு நல்ல சந்தர்ப்பம் வந்துவிட்டது! பராக்கிரமபாகு அனுப்பிய பரிசுகளை இவன் ஏற்றுக்கொண்டான் என்ருல், அவனோடு நட்புக் கொள்ளத் தீர்மானித்துவிட்டான் என்று பொருள்! இலங்கை அரசனோடு நட்புக்கொண்டதும், சோழ மன்னருக்கு விரோதியாகக் கிளம்புவான்! அத்தகைய ஆபத்தை முளையிலேயே கிள்ளியெறியவேண்டும் என்பதற்காகத்தானே நான் மதுரையில் இருப்பது! பௌத்தர்கள் தலை நிமிர்ந்து நடப்பதை நான் கொஞ்ச நாட்களாகவே பார்த்துக்கொண்டு தான் வருகிறேன்! ஒரு சாதாரண குடியில் பிறந்த பொன்னையாவைத் தூக்கிலிட்டபோது நாட்டில் ஏற்பட்ட பயம்கூட ஆளவந்தாரின் மகனான சோலையப்பனைப் பிணமாக்கியபோது ஏற்படாததைக் கவனித்துக்கொண்டுதான் வருகிறேன்! சோலையப்பன் கொல்லப்பட்டான் என்பதைக் கேள்விப்பட்டதும், சைவத்தின் பகைவர்கள் எவ்வளவு நடுநடுங்கியிருக்க வேண்டும்? நடுங்கினார்களா? இல்லையே! ஏன்? மாரிமுத்து, அங்குதான் இருக்கிறது சூட்சுமம்! யார் செத்தாலும் கவலைப்படாத அளவிற்கு எதிரிகளின் கை ஓங்கிக்கொண்டு வருகிறது என்பதைத்தானே இது காட்டுகிறது! திரை மறைவில் மாபெரும் சதி உருவாகிக்கொண்டிருக்கிறது! அதை நான் தெரிந்துகொள்ளாமல் இல்லை! தெரிந்துகொண்டும், பேசாமல் இல்லை! நிலைமையைச் சோழவேந்தருக்குத் தெரிவித்திருக்கிறேன்! இன்னும் சில நாட்களில் அவரிடமிருந்து ஓலை கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்!’

‘ஓலையா?’

‘ஆமாம் மாரிமுத்து. அனுமதி!,

‘அனுமதியா? எதற்கு?’

‘நான் விருப்பப்பட்டால் குலசேகரனைக்கூட இந்த மதுரையின் சிறையிலேயே அடைக்க முடியும்! அப்படிப்பட்ட அதிகாரத்தை, சோழ மன்னர் எனக்குத் தரப்போகிருர்! அப்படித் தரும் அதிகார ஓலையைத் தான் நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்!’ என்று தூமகேது உரத்த குரலில் சிரித்தான்.

‘அதிகார ஓலையை எதிர்பார்க்கிருனே அதிகார ஓலையை! உடனே இச்செய்தியை அரசரிடமும் செந்தாமரையிடமும் கூறவேண்டும்!’ என்று மாரிமுத்து மனத்திற்குள் முடிவு செய்துகொண்டு, ‘நான்

சென்றுவருகிறேன்!' என்று தூம கேதுவைப் பார்த்துக் கூறினன்.

'செய், மாரிமுத்து! நானும் சென்று இலங்கை அரசன் அனுப்பிய பரிசுகளைப் பார்க்கிறேன்!'

மாரிமுத்து சென்ற சிறிதுநேரம் கழித்து, அரசனைப் பார்க்க தூமகேது தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில்—மதுரையிலேயே குலசேகரன் முடி சூடிய நாள் முதல் இருந்துவந்த சோழத் தளபதிகள் இருவரில் ஒருவனை—பெருமானம்பி பல்லவராயன் என்பவன், அந்த அறையினுள் வந்தான்.

'பல்லவராயனு? வா வா! என்று தூமகேது பல்லெல்லாம் தெரிய, அவனை வரவேற்ருன்.

'ஒற்றர் நாயகமே, கேட்டீரா அக்கிரமத்தை?. என்று ஆத்திரத்தோடு பல்லவராயன் வினவினதும், தூமகேது ஒரு கேலிச் சிரிப்புச் சிரித்தான்.

'இப்பொழுதுதான் கேள்விப்பட்டேன், பல்லவராயா!'

'குலசேகரன், நமது மன்னர்பிரானுக்கு, மாபெரும் துரோகம் செய்துவிட்டார் அல்லவா?'

ஆத்திரப்படாதே, பல்லவராயா! குலசேகரன் துரோகம் செய்துவிட்டான் என்பதற்காக நாம் அச்சமோ ஆத்திரமோ அடையக்கூடாது! அமைதியாக இருக்க வேண்டிய நேரம் இது!'

'சோழ நாட்டிற்கு இச் செய்தியை அனுப்பிவிட்டீர்களா?'

'மாரிமுத்துதான் செய்தியை முதலில் வந்து என்னிடம் சொன்னுன்! அவனை அனுப்பிவிட்டு, உடனே ஓலை எழுதி நம் ஆள் வசம் இப்பொழுதுதான் அனுப்பி வைத்துவிட்டு, குலசேகரனைப் பார்க்கலாம் என்று புறப்பட இருந்த நேரத்தில் நீ வந்தாய்! குலசேகரனுக்கு இவ்வளவு துணிவு வரும் என்று கனவில் கூட நான் எண்ணியதில்லை! அழிவுக்காலம் நெருங்கிவிட்டால், மனிதர்களுக்கு இப்படித்தான் புத்தி மாறும்!'

'இலங்கை அரசனேடு சேர்ந்து கொண்டு, குலசேகரன் சோழ நாட்டின்மீது படை எடுத்தால்...'

'படை எடுத்தால், வெற்றி கண்டு விடுவானு? வீண் பயம் எதற்கு?'

'பயத்தால் நான் பேசவில்லை ஒற்றர் நாயகமே, எச்சரிக்கையோடு இருக்கவேண்டுமே என்பதற்காகச் சொல்கிறேன்!'

'பூனையிடத்தில் புலி எதற்காக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தளபதி? இலங்கைஅரசனேடு பாண்டியன் மட்டுமல்ல, சேரன் வேண்டுமானுலும் சேர்ந்துகொள்ளட்டும்—என்ன செய்ய முடியும் நமது சோழ மன்னரை! இராசாதி ராச சோழரின் விழி உயர்ந்தால், எதிரிகள் யார் யார் ஆனுலும்—அவர்களுக்கு எவ்வளவு சேனைகள்தான் இருந்தபோதிலும்—அவ்வளவும் பிடி சாம்பலாகி விடாதா? இந்த ஒரு சிறிய சம்பவத்தைக் கண்டு நாம் பயப்படுகிறோம் அல்லது பதறுகிறோம் என்ருல், நமது மன்னரின் தோள் வலிமையை நாம் சந்தேகிக்கிறோம் என்று அர்த்தம்! தெரிகிறதா பல்லவராயா?'

'புரிகிறது ஒற்றர் நாயகமே! ஆனுல் குலசேகரனின் இந்தத் துரோகச் செயலைக் கேள்விப்பட்டது முதல், என் மனம் கொதிக்கிறது!'

சோழ மன்னரிடத்தில் நாம் விசுவாசமுள்ளவர்கள். அதனுல் மனத்தில் கோபம் கொக்கரிக்கும்தான்! அந்தக் கோபத்தை வெளியில் நாம் காட்டலாமா? காட்டத்தான் முடியுமா?

'காட்டினுல் என்ன?'

'குழந்தையைப் போலப் பேசுகிருயே தளபதி! மதுரையில் நம் வசம் இருப்பதோ சிறிய படை! அதை நம்பி நாம் என்ன செய்வது? அதனுல்தான் சோழப் படைகளைத் தயாராக இருக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு அதன் பிறகு நம் கோபத்தை வெளியில் கொட்டினுல் எதிர்பார்த்த பயன் எளிதில் கிடைக்கும்.

'இந்த நிலைமையை நமது அரசருக்கு அறிவித்திருக்கிறீரா?'

'அறிவித்தது மட்டுமல்ல, பிரத்தியேக அதிகாரமும் எனக்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறேன்!'

'அவ்வளவு செய்திருக்கிறீர்களா?'

'செய்யாமல் இருப்பேனு, பல்லவராயா? திருமேனியின் அழகில் எப்பொழுது குலசேகரன் சொக்கினுனே அப்பொழுதே எனக்குத் தெரியுமே, இப்படிப்பட்ட துரோகச் செயல்களெல்லாம் தலை தூக்கும் என்று! பெண்களால் அழிந்த ஆண்களின் எண்ணிக்கை புராணங்களில் ஏராளம்! அப்படி அழிந்தவர்களின் வரிசையில் குலசேகரனும் தன் பெயரைப் பொறித்துக் கொள்கிருன்! இலங்கை அரசன் பெரிய தந்திரக்காரன்—இல்லாவிட்டால், பரிசுகள் அனுப்பிவைப்பானு இவனுக்கு?'

'அந்தப் பரிசுகளைப் பார்த்த பரவசத்தினுல்தான், இவ்வளவு துணிவு இவனுக்கு வந்திருக்கிறது?'

இவ்வாறு பல்லவராயன் கூறியதும் தூமகேது அவனை உற்றுப் பார்த்தான். அவன் வேறேதோ முக்கிய செய்தியை மனத்தில் வைத்துக்கொண்டு பேசுகிருன் என்பதை அப்பொழுதுதான் தூமகேது புரிந்து கொண்டான்.



பல்லவராயா, இலங்கை அரசன் அனுப்பிய பரிசுகளைப் பெற்றுக் கொண்டதுதானே துரோகச் செயல் என்று நீ கூறுகிருய்?

'அதுவும் துரோகம்தானே?'

'அப்படியானுல் அதைத் தவிர வேறெதாகிலும் குலசேகரன் துரோகம் இழைத்திருக்கிருனு?'

'உங்கள் கேள்வியே வேடிக்கையாக இருக்கிறதே, ஒற்றர் நாயகமே?'

'இன்னும் என்ன செய்தான் குலசேகரன் முதலில் அதைச் சொல்!'

'மதுரைக் கோட்டை வாயிலிலிருந்து — இந்நாள்வரை நமது வெற்றியின் அறிகுறியாக இருந்து வந்த சிங்களப் படைத் தலைவர்களின் தலைகளை அப்புறப்படுத்தி விட்டாரே!'

'எப்பொழுது?' என்று தலையில் இடிவிழுந்தவனைப் போலக் கத்திஞன், தூமகேது,

'சிறிது நேரத்திற்கு முன்பு நான் கேள்விப்பட்டுவிட்டு உடனே கோட்டை வாயிலுக்கு ஓடினேன்!'

தலைகள் இல்லையா?

'ஆமாம் ஒற்றர் நாயகமே அங்கே அந்தத் தலைகள் காணப்படவில்லை!'

'பார்த்தாயா?'

'நன்ருகப் பார்த்தேன்!'

'சிங்களப் படைத் தலைவர்களின் அந்தத் தலைகள் அங்கே இல்லையா?'

'ஆமாம்!'

'உண்மையிலேயே இது மாபெரும் துரோகம்தான்! பரிசுகள் வந்ததைப் பற்றி எண்ணித்தான் நீ கோபமடைகிருய் என்று உனக்குச் சமாதானம் கூறினேன்! இவ்வளவு பெரிய ஆணவச் செயலைக் குலசேகரன் செய்துவிட்டான் என்பது அப்பொழுது எனக்குத் தெரியாது! இதை எண்ணிஞல், என் இதயமே வெடித்து விடும் போலிருக்கிறது. யானை நினைத்தால், கரும்புத் தோட்டம் தவிடுபொடியாகிவிடும் என்று மாரிமுத்து சிறிது நேரத்திற்கு முன்பு தான் கூறிஞன்! நான் ஏன் யானையாக மாறி, பாண்டிய நாடு என்ற கரும்புத் தோட்டத்தை அழித்து நாசமாக்கக்கூடாது என்று நினைக்கிறேன்!......பல்லவராயா, ஒன்று செய்!...'

சொல்லுங்கள், ஒற்றர் நாயகமே!'

'உடனே நீ சோழ நாட்டிற்குப் புறப்படு! நிலைமையை நீயே நமது மன்னரிடம் எடுத்துச் சொல்!'

'அப்படியே செய்கிறேன்!'

'அது மட்டுமல்ல, எனக்குப் பிரத்தியேக அதிகாரம் தரும் ஓலையையும் நீயே வாங்கி வந்து விடு!'

'வாங்கி வந்துவிடுகிறேன்!''

'சரி, புறப்படு!'!

பல்லவராயன் அந்த அறையை விட்டு வெளியே சென்றதும், 'அந்தத் தலைகள் கோட்டை வாயிலில் இல்லையா? என்று தூமகேது தன்னைத்தானே ஒருமுறை கேட்டுக் கொண்டான்,

''சைவத்திற்கும் பௌத்தத்திற்கும் நேரிடையான போர் ஆரம்பமாகிவிட்டது! பார்க்கிறேன் ஒரு கை!'' என்று ஆவேசத்தோடு சொல்லிக்கொண்டு, அந்த இடத்தைவிட்டு வெளியே வந்தான்.

அரசனிருந்த விசாலமான மண்டபத்தினுள் நுழைந்ததும், தூமகேது ஒருகணம் திகைத்து நின்றுவிட்டான்.

பெரிய பெரிய தங்கத் தாம்பாளங்களில், இலங்கை அரசன் அனுப்பிய பரிசுப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன. தூமகேது வந்ததையும் கவனிக்காமல் அவற்றைப் பார்த்துப் பூரித்தபடி அங்கே குலசேகரன் நின்றிருந்தான்.

முத்து, கோமேதகம் வைரம், பச்சை முதலிய ஒளி செய்யும் கற்கள் தட்டுத் தட்டாக இருந்தன. யானைத் தந்தம், பொற்கயிறு, சந்தனப் பாகை, சந்தனப் பேழை, அணிகலப் பேழை, மணிவிளக்கு அகிற்புகைத் துளையகல் முதலிய பரிசுப் பொருள்களைக் காணக் காண, தூமகேதுவின் கண்கள் சிவந்தன.

'அரசே!'

ஆத்திரத்தை எல்லாம் அடக்கிக் கொண்டு தூமகேது இப்படி அழைத்ததும், 'நீங்களா?' என்று அலட்சியத்தோடு கேட்டுக்கொண்டே, குலசேகரன் திரும்பிஞன்.

[வளரும்]

5-ம் பக்கத் தொடர்ச்சி

சாட்டுகளுக்குப் பதில் சொல்வதற்கு மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஏ. எம். தாரிக் என்னும் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் பிர்லா நிறுவனங்களுக்குத் தெரியாத அரசாங்க இரகசியம் இந்த நாட்டிலேயே ஏதும் இல்லை என்று கூறி பிர்லாவின் குடும்பத்தைச் சார்ந்தவரும், பிர்லா நிறுவனம்ஒன்றில் மாதம் ரூ. 15000 ஊதியம் பெறுபவரும் இந்தியாவிலேயே மிக அதிகமாகச் செலவு செய்து தேர்தலில் வெற்றிபெற்றவருமான ஆர். கே. பிர்லா என்பவர் மத்திய உருக்கு அமைச்சர் சென்னுரெட்டிக்குத்தொழிற்சாலை லைசென்ஸ் சம்பந்தமாக அதிகாரத் தோரணையில் உரிமையுடன் எழுதிய கடிதம் ஒன்றையும் படித்துக் காட்டியிருக்கிருர்.

அமைச்சரவையினரை மட்டுமல்ல; அவர்களது அலுவலகத்தினரைமட்டுமல்ல மத்திய புலன் விசாரணைத் துறையினரையும் ஏமாற்றும் திறமை பெற்றிருக்கின்றன பிர்லா நிறுவனங்கள்.

சமீபத்தில் சந்தேகத்தின்மீது பிர்லாவின் கல்கத்தா நிறுவனம் ஒன்றில் புலன் விசாரணைத் துறையினர் சோதனையிட்டுக்கொண்டிருக்கும்போதே தொடர்புள்ள தஸ்தாவேஜிகள் அத்தனையும் மற்ருெரு பக்கத்தில் எடுத்து அழிக்கப்பட்டிருக்கின்றன.

* அசாரி அறிக்கை
* பிரதம அதிகாரியின் குற்றச்சாட்டு
* பாராளுமன்ற உறுப்பினர்கள் கண்டனம்
* பத்திரிகைகளின் கண்டு பிடிப்புகள்
* புலன் விசாரணைத் துறையினர் அனுபவம்.

ஆகிய இத்துணைக்குப் பின்னரும் பிர்லா நிறுவனங்கள் அனைத்தின் மீதான ஒரு மொத்த விசாரணைக்கு மத்திய அரசு மனம் காட்டுவதாகக் காணேம்!

ஒருவேளை ''நாங்கள் ஜீரணிக்க முடியாதவர்கள்'' என்று பிர்லா நிறுவனம் பத்திரிகைகள்மூலம் அளித்த எச்சரிக்கை மத்திய அரசுக்கு அச்சத்தைக் கொடுத்திருக்கவேண்டும்.

''ஜீரணிக்க முடியாத''வற்றை உட்கொண்டுவிட்டு அஜீரணத்திஞல் அவதிப்படுவானேன் என்று புதுடில்லி முன் கூட்டியே ஜாக்கிரதையாக இருக்கிறதுபோல் தெரிகிறது.

''பூர்வாங்க விசாரணைக்கு இன்னும் சற்றுக் காலம் தாழ்த்திஞல் பின்னர் பிர்லா மாளிகைகளின் மர்மங்கள்பற்றி விசாரிக்கவே முடியாத அளவுக்கு எல்லாம் மறைக்கப்பட்டுவிடும் அல்லது அணுகவேமுடியாத பயங்கர நிலையைப் பெற்றுவிடும்'' என்று காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரே பாராளுமன்றத்தில் அறிவுறுத்தியிருப்பதை மத்திய அரசினர் சிரத்தையுடன் சிந்திக்க வேண்டும்.

# இந்திரா ஏமாந்தார்?

— மதி —

**அன்புள்ள நண்பா!**

அரசியலில் எத்தனை எத்தனை அற்புதங்கள் நிகழ்கின்றன என்பதை எண்ணிப்பார்த்தேன்! அந்த அற்புதங்களுக்கு ஒரு சிகரமாக ஒரு நிகழ்ச்சி தென்பட்டது; யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்பது பொது மொழியல்லவா! அதனால் உனக்கும் தருகிறேன். சுவைக்க மட்டுமல்ல; சுவைத்துவிட்டுச் சிந்திக்க! சிந்தித்துவிட்டுச் செயல்பட!

கொடைக்கானல், படகு விளையாட்டு—இந்த இரு சொற்களையும் இணைத்துப் பார்க்கிறபோது நண்பா உனக்கு என்ன நினைவுக்கு வருகிறது? யார் உன் முன் வந்து நிற்கிறார்கள்?

நிலவு, காதல் என்ற இரு கிளவிகளையும் ஒரு சேர நினைத்துப் பார்க்கிறபோது கட்டான காளைப் பருவத்திலிருக்கும் உன் நினைவு எதுவரையில் ஊடுருவிச் சென்று எதெதனை எட்டிப் பார்த்துவிட்டு வருகிறது?

கன்னம் வருடி, கனி இதழ்ச் சுவை தந்த உன் காதல் மனையாளிடம் பெற்ற அந்த இன்பத்தை எண்ணிப் பார்க்கிறாயா? அப்படியானால் சரி, உன் விடை சரியானதேயாகும்.

அதுபோலவே நண்பா, கொடைக்கானலையும் படகு விளையாட்டையும் ஒரு சேர இணைக்கிறபோது இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களது நினைவு வந்திருக்குமானால் நீ அரசியலில் சரியான நினைவோடு செயல்பட்டு வருகிறாய் என்பதை ஒப்புக்கொள்கிறேன்!

ஏதோ ஒரு செய்தி இதழில், இந்திரா அம்மையாரின் கொடைக்கானல் வருகையையும் ஓய்வு பெற வென்ற அதன் காரணத்தையும் இணைத்து விமர்சித்திருக்கக் கண்டேன்.

தமிழகம் நீங்கலாக இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மொத்த மாநிலங்களிலும் ஏதோ ஒரு குழப்ப நிலையும் பதட்ட நிலையும் அமைதி கெட்டு ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கிற ஒரு நிலைமையும் இருப்பதனால் தானோ, பிரதமர் இந்திரா தமிழகத்தை-தன் ஓய்வுக்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்? என்று கேட்டிருந்தது அந்த இதழ்!

நல்ல கேள்வி! பிரதமரது உள்ளம் எப்படி எப்படி அலைக்கழிக்கப்பட்டிருக்க வேண் ம் என்பதனை சிறப்பாக எடுத்துக் காட்டும்படியான வினாவாக இருந்தது அது.

நண்பா! மத்திய அரசின் இப்போதைய முக்கிய விவகாரம், குறிப்பாக பிரதமர் இந்திரா காந்தி அவர்களது நெஞ்சைச் சுண்டி இழுக்கும் விவகாரம் 'இந்தி' பற்றியதாக இருக்கிறது என்பதைத்தான் நீ முன்னமேயே அறிந்து வைத்திருக்கிறாய் அல்லவா!

தனி ஒரு மனிதன் பிரச்னைகளைக் கண்டு அஞ்சி ஒதுங்குவானானால் அவனைப் பற்றி விமர்சிப்போர், அவனைக் கோழை என்பார்கள்!

ஒரு சமுகம் அல்லது இனம் ஒரு பிரச்னையை உருவாக்கிவி கிறபோது அதனைக் கண் ஒரு அரசு அஞ்சுமானால் அல்லது அஞ்சி ஒதுங்குமானால் அதனைப் பற்றி அரசியல் விமர்சகர்கள் என்னவென்று கூறி இருக்கிறார்கள்? கூறப்பட்டுள்ள சொல் ஏதாவது உனக்குத் தெரிந்தால் இன்றைய மத்திய அமைச்சரவையுடன் சிறப்பாக இந்திரா அம்மையாருடன் இணைத்துக் கொள்ளும் உரிமையை உனக்கே வழங்குகிறேன்! வேண்டிய அளவுக்குப் பயன்படுத்திக் கொள்! விலா நோகச் சிரி! விந்தையினை மற்றையோருக்கும் விண் க் காட்டு'!!

இந்தி பேசாத பகுதி மக்களின் மனதைச் சாந்திப்படுத்தும் நோக்கத்துக்காக மட்டுமல்ல; அந்த கோரிக்கையில் உண்மையும் ஒற்றுமை உணர்வும் இருப்பதனாலேயேதான், அன்றைய பிரதமர்கள் நேருவும், லால்பகதூர் சாஸ்திரியும், இந்திக்கு இணையாக ஆங்கிலமும் நீடிக்கும் என்று வாக்குக் கொடுத்துவிட்டு மறைந்து போனார்கள்! நண்பா! அவர்கள் மறைந்து போனார்கள்! ஆனால் அவர்களோடு அவர்கள் தந்த வாக்குறுதிகளுமா மறைந்து போகவேண்டும்? மறைந்தே போகும் என்ற அளவுக்குதான் மைய அரசு தன் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

ஆட்சி மொழிச் சட்டத்துக்குத் திருத்தம் கொண்டு வந்து வாக்குறுதிக்கு உயிரூட்டம் தர முன்வந்து நின்ற போதெல்லாம் பிரதமர், அஞ்சி ஒதுங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது! இதைவிட விந்தை வேறெதாவது இருக்க முடியுமா?

இந்தியத் துணைக்கண்டத்து மொத்த மாநிலங்கள் பதினைந்து என்றும் பதினாறு என்றும் வெவ்வேறு வகையான விளக்கங்கள் கொ க்கப்படுகின்ற விந்தைக்கிடையே அவற்றில் வட்டமாக உள்ள ஐந்தே ஐந்து மாநிலங்களில் அ வும் 40 சதவீதத்துக்கும் குறைவாகவே இருக்கிற மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகித்துக் கொண்டிருக்கும் சில மக்களவை உறுப்பினர்களின் நிர்ப்

பந்தத்திற்குப் பணிந்து நடைபெற்று முடிந்த தொடர்க் கூட்டத்தில் தாக்கல் செய்தேவிடுவதாக ஒப்புக்கொண்ட திருத்தச் சட்டத்தை தாக்கல் செய்யாமலே விட்ட நிகழ்ச்சி விந்தைக்குரியதல்லவா! அஞ்சி ஒதுங்கிவிட்டதல்லவா!

அறுபது சத வீத மக்களின் பிரதிநிதிகள் கூடி வேண்டுகோள் விடுத்தும் விண்ணப்பம் தந்தும் அதனையும் மதியாது இந்தி வெறியர்க்கு இடம் கொடுத்து திருத்தச் சட்டத்தை தாக்கல் செய்யாது விட்டதனை கோழைத்தனம் என்று நான் கூறமாட்டேன்—நீ எப்படி வேண்டுமானாலும் அழைத்துக் கொள்!

ஆனால் நண்பா! இந்தி வெறியர்க்கு அஞ்சி ஒதுங்கும் இயல்பு இன்றைக்கு இந்திரா அம்மையாருக்கு இருக்கிறது என்பது மட்டும் அல்ல—இந்திக்கு அரியாசனம் தந்துவிட வேண்டும்; இந்திக்காரர்களுக்கு சரியாசனம் நாட்டில் ஏற்பட்டுவிட வேண்டும் என்ற துடிப்பும் ஒட்டியே இருக்கிறது என்பதும் தெளிவாகவே இருக்கிறது.

இந்த நோக்கத்தை ஈடேற்றிக் கொள்ளும் உபாயமாகத்தான், நண்பா, தொடர்பு மொழி இணைப்பு மொழி என்றெல்லாம் சொல்லலங்காரம் செய்துகாட்டப்படுகிறது.

நண்பா! பிரதமர் இந்திரா அம்மையார். மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்து குந்தியவுடனேயே அவரைச் சூழ்ந்துகொண்ட செய்தியாளர்கள் எழுப்பிய வினாக்களுக்குப் பதிலிருக்கையில்,

> இந்தி கற்கவில்லையானால் மத்திய அரசின் வேலை வாய்ப்புக்களை அத்தகையோர் பெறவே முடியாது.

என்று கருத்தறிவித்திருக்கிறார்!

அன்றையக் கூட்டத்தில் வட்டார மொழி ஆங்கிலம், இந்தி என்று இருக்கவேண்டும் என்பதுதான் என் எண்ணம் என்று பேசி இருக்கிறார்.

ஆங்கிலம்-இந்தி இரண்டும் இருக்கவேண்டும் என்பதுதான் என் எண்ணம் என்று ஒப்புக்கொண்டுவிட்டு, இந்தி பயிலாதோர், மத்திய அரசில் வேலை வாய்ப்புக்கள் பெறவே முடியாது என்பது வியப்பாக இல்லையா! விந்தையாகவும் இல்லையா?

எனவேதான் இந்தி வெறியர்களாக வடநாட்டார் இருக்கிறார்கள் என்பது தங்கள் சொல்லொன்றும் செயல் ஒன்றுமான தன்மை மூலமும், இடத்துக்கு இடம் மாறுபட்ட கருத்துக்களைக் கொட்டுகிற பான்மை மூலமும் பெற முடிகிறது.

ஓய்வுபெற வந்த இடத்தில், பாவம் பிரதமர் ஓய்வற்ற—உலைவுற்ற உள்ளத்தோடு திரும்பிப் போகவேண்டியவராகி இருக்கிறார்.

நண்பா! படகுப் பயணத்தில் பெற்ற இன்பம் அனைத்தையும் சென்னையில் இழந்துவிட்டுத் திரும்பி இருக்கிறார்!

இன்னும் சொல்லப்போனால் இந்திரா ஏமாந்துபோய் திரும்பி இருக்கிறார்!!

தெளிவாகச் சொல்லப்போனால் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், தன் இந்திக்கொள்கையில் ஏமாந்து போய், திரும்பியிருக்கிறார்.

நண்பா! எப்படி ஏமாந்தார்? ஏன் ஏமாற முடிந்தது? இந்தி இந்தி என்றே நாளின் ஒவ்வொரு நிமிடத்திலும் செபித்துக்கொண்டிருந்த ஒருவர், அந்த இந்தியால் எல்லாம் முடியாது என்பதை ஒப்புக்கொள்ளும் படியாக ஏமாந்துபோய் திரும்பி இருக்கிறார்!

இந்தியப் பிரதமர் இந்திரா யாரிடம் ஏமாந்தார்?

விருதுநகர்த் தொகுதியிலே, அகில இந்திய காங்கிரசுத் தலைவர் யாரிடம், தன் தோல்வியைத் தழுவிக் கொண்டார்? வெற்றித்திரு பெற்ற அந்த சீனிவாசன், எந்த சமூகத்தின் சார்பில் தன்னை வளர்த்துக் கொண்டவர்?

அந்த சமூகத்தின் பிரதிநிதிகளிடம் நண்பா, இந்திரா ஏமாந்துபோய் திரும்பி இருக்கிறார்!!

அதுதான் நண்பா, சென்னையில் தன்னை இந்தி மொழி விவகாரம் பற்றிச் சந்திக்க வந்த மாணவர் பிரதிநிதிகளிடம் பிரதமர் ஏமாந்துபோய் இருக்கிறார்!

> "இந்தியை வேண்டாம் என்பவர்கள், இந்தியாவிலிருந்தே வெளியேறி விடலாம் என்ற கருத்திலிருந்தது பிரதமரின் பதில்கள்!"

என்று அந்த பிரதிநிதிகளில் ஒருவரான மாணவர் துரைசாமி கூறுவதைப்போல இந்தியாவிலிருந்தே வெளியேறிவிடத்தக்கச் செயல்களைச் செய்து வரும் இந்திரா அம்மையார். இந்தி இருக்கிறதா என்று கேட்கவில்லை நண்பா ஆங்கிலப் பிரதி இருக்கிறதா என்றுதான் கேட்க முடிந்திருக்கிறது!!

> "இந்தியா வேண்டுமா? இந்தி வேண்டுமா? இரண்டில் ஒன்றுதான் முடியும்; நாங்கள் இந்தியா வேண்டும் என்கிறோம்; இல்லை, இல்லை; இந்திதான் வேண்டும் என்று நீங்கள் கூச்சலிட்டால், இறுதியாக எச்சரிக்கிறோம்,
>
> **எங்கள் தமிழ்நாடும் இந்தியக் கூட்டாட்சியிலிருந்து விடுபட்டுத் தனித்தியங்க நேரும்."**

என்று மாணவர் பிரதிநிதிகள் தந்த தமிழ் விண்ணப்பத்திற்கு—எச்சரிக்கை மனுவிற்கு,

### ஆங்கில மொழிபெயர்ப்பு இருக்கிறதா?

என்றுதான் அவரால் கேட்க முடிந்திருக்கிறதே தவிர, இந்திதான் இணைப்பு மொழியாக வந்துதீரவேண்டுமே; ஆட்சி மொழியாக 1965லேயே வந்து ஆயிரக்கணக்கான உயிர்களை ஆகுதி பெற்றுவிட்டதே, அந்த இந்தியின் மொழிபெயர்ப்பு இருக்கிறதா? என்று கேட்க முடியவில்லை! விசித்திரம் நண்பா இது! விந்தையான உண்மை இது நண்பா!

மாணவர்களது எழுச்சியினை முன்னாள் முதல்வர் திரு. பக்தவத்சலத்தினால் கொஞ்சமும் தடுத்து நிறுத்த முடியவில்லை; ஆனால், அறிஞர் பெருந்தகை — முதலமைச்சர் அண்ணா அவர்களால் தடுத்து நிறுத்த மட்டுமல்ல; பிரதமரைச் சந்திக்கச் செய்து, மாணவர் சமூகத்தின் உள்ளக் கொதிப்பை பிரதமரிடம் எடுத்துக் காட்டும் வாய்ப்பினையும் ஏற்படுத்தித் தர முடிந்திருக்கிறது!

பிரதமரின் தமிழக வருகையின்போது கருப்புக் கொடி காட்டித் தங்கள் எதிர்ப்பை எடுத்துச்சொல்ல எழுச்சி பெற்ற மாணவர்களது உள்ளத்தை அமைதி வழியில், நீவிக்கொடுத்து — அமைதியான வழியில் கருத்தினை எடுத்துக்காட்ட வழிவகை கண்ட அறிஞர் பெருந்தகை அவர்கள் கோவையில், செய்தியாளர்கள் கூட்டத்தில்,

> "As an individual I consider Prime Minister most sympathetic to our cause. But, if the students felt frustrated on imposition of Hindi nobody can stop them from agitating."

என்று பேசி இருப்பதன் மூலம், இந்த விவகாரத்தில் பிரதமர், சரியான—முறையான தீர்வு காணத் தவறு வாரானால் எதிர்கால மாணவர் உலகம் எப்படி இருக்கும் என்றுதான் கருவதாக ஒரு கருத்தையும் வெளியிட்டு, நிலைமையைத் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள்.

> "இந்த (இந்தி) விவகாரத்தில் பிரதமர் நம்மீது மிகவும் அனுதாபம் உடையவராக இருக்கிறார்; ஆனால், மாணவர்கள் தம்மீது இந்தி திணிக்கப்படுகிறது என்ற அச்சத்திற்கு ஆட்படுவார்களானால். அதனால் அவர்கள் ஈடு படும் கிளர்ச்சியிலிருந்து அவர்களை எந்த ஒரு வராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பது என் சொந்தக் கருத்தாகும்."

என்ற கருத்தைத் துல்லியமாகத் தெரிவித்து இருப்பதன் வாயிலாக, 'மாணவர்கள் சமுகம் விண்ணப்ப மனுவைக் கொடுத்துவிட்டதுடன் அமைதி பெற்று விடாது! இந்திய அரசாங்கமே! எச்சரிக்கையா இரு! மாணவர்கள் உலகம் மீண்டும் எழுச்சி கொள்ளும்!! அவ்வாறு எழுந்துவிட்டால், என்னால் கூட அல்ல—உன் அதிகார ஆணவத்தாலும், இராணுவ வல்லமையாலும் கூட தடுத்து நிறுத்த முடியாது! எச்சரிக்கை! என்ற பொருளையும் எதிர்காலத்தையும் விளக்கிக் காட்டி இருக்கிறார்கள்.

> "இந்திதான் வேண்டும் என்று நீங்கள் கூச்சலிட்டால், இறுதியாக எச்சரிக்கிறோம்; எங்கள் தமிழகம் இந்தியக்கூட்டாட்சியிலிருந்து விடு பட்டுத் தனித்தியங்க நேரிடும்"

என்ற மாணவர் பிரதிநிதிகளின் எச்சரிக்கையோடு, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களது கருத்தையும் இணைத்துக் கொண்டால், நண்பா, எதிர்காலத்தில் எத்துணை ஆக்கப்பணிகள் காத்திருக்கின்றன என்பது புரியவரும்.

அந்தப் பணிக்கு நாம், நம்மவர்களைத் தயார் செய்யவேண்டும்! அந்த தொடர்பில்,

> "நீங்கள் இந்திய ஒற்றுமையை விரும்புகிறீர்களா?"

என்ற பிரதமரது வினாவிற்கும்,

> "அந்த இந்திய ஒற்றுமையைக் கருதித் தான் சொல்கிறோம்; எங்களுக்கு இந்தியா வேண்டும்; இந்தி வேண்டாம்; ஆங்கிலமே நீடிக்கட்டும்"

என்ற மாணவர் பிரதிநிதிகளது விடைக்கும் முறையான விளக்கம் கிடைத்தாக வேண்டும்!

நண்பா! இந்தித் திணிப்பின் மூலம் இந்தியாவை ஒரு நாடாக்கிவிடவும், 'இந்திய ஒற்றுமை' என்பதன் பேரால் ஒரு இனத்திற்கு வாழ்வும் தரத் துடிக்கின்ற இவர்கள் எத்தனை ஆண்டுக்காலமாக இந்தியாவைக் கண்டெடுத்திருக்கிறார்கள்?

'இந்திய ஒற்றுமை' என்பது பற்றி வாய் கிழியப் பேசுவோரில் எவரும் பிறக்கும் முன்பு அல்ல—அவர்களது ஒன்று அல்லது இரண்டு தலைமுறைக்கு முன்னே இந்தியா என்ற நாடு இருந்ததுண்டா?

'இந்தியா'வைத் தந்தவர்ளே—அந்தப் பெயரைச் சூட்டியவர்களே 'ஆங்கிலேயர்கள்' அல்லவா? ஆங்கிலேயர்கள் சூட்டிய பெயரையுடைய ஒரு நாட்டுக்கு—அந்த பெயரையும் மாற்றிவிட்டு ஆங்கிலத்தை அகற்ற முயல்வார்களா? என்றெல்லாம் நீ நினைக்கிறாய்!

தெரிகிறது! அது பிரதமரால் முடியாது! ஏனென்றால், இந்தியால் முடியாது என்பதனை, தன்னையறியாமலேயே பிரதமர் இந்திரா அம்மையார் ஒப்புக்கொண்டுவிட்ட பின்பு, ஆங்கில மொழி பெயர்ப்பு இருக்கிறதா? என்று அவர் வாய் திறந்துக்கேட்டுவிட்ட பின்பு—

> இந்திக்கு இந்நாட்டில் இடமில்லை என்றும்,
>
> நுழைக்கத் துணிந்தால் பிரிந்தே போவோம் என்றும்,

விடப்பட்டுள்ள எச்சரிக்கைக்குப் பின்பு—

நீயும் நானும் வாய்மூடி இருக்கலாமா? மொழி விவகாரத்தில் தமிழக அரசின் திட்டவட்டமான கொள்கை வெளியிடப்பட்டுவிட்ட பின்னரும், இந்தி நுழைவு துரிதப்படுத்தப்பட்டுவிட்டால், தோள்கள் புடைக்காமல் துவண்டு கிடக்கவா போகின்றன!

புரிகிறது! செருமுனைச் சீற்றம் உன் முகத்தில் தெரிகிறது! பொறு நண்பா! அறிஞர் அண்ணாவின் தலைமை நமக்கு வழி காட்டட்டும்! அதுவரைக்கும் பொறுத்துக் கொள்ளேன். பாவம், இந்திரா! ஏமாந்து திரும்பி இருக்கிறார்!! மனுவைப் பெற்றுச் சென்றிருக்கிறார்! என்ன சொல்கிறார்? என்ன செய்கிறார்? என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

இந்தி விஷயத்தில் இந்திராவே ஏமாந்துவிட்டார்! அதுபோதும் இப்போதைக்கு! நாளைக்கு?.........காலம் அதனை கணிக்கட்டும்!!

அன்புள்ள,

**திருவாரூர் முத்துராமன்.**

முகப்பில்:

**மதுரை மாவட்ட**

**தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள்**

எஸ். அக்கினிராசு—திருப்பரங்குன்றம்

கே. எம். எம். மேத்தா—பெரியகுளம்

ஓ. பி. ராமன்—மேலூர் தெற்கு

நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு!

# சித்தர் நவலோக கல்பம்

தங்கம் வெள்ளி, தாம்பரம், மற்றும் பல உலோகங்கள், அனேக அபூர்வ மூலிகைகள், மருந்துப் பொருள்களுடன் பல வருட ஆராய்ச்சிக்குப்பின் உருவானது.



## டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளையின்

## ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை

—[REGD]—

307 / 308, திருவல்லிக்கேணி ஹைரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 84786

கிளை வைத்தியசாலை:
மாமண்டூர் வடபாதி, பாலாற்றங்கரை சமீபம், செங்கற்பட்டு ஜில்லா.

ஆஸ்துமா, மதுமேகம், (டையாபடீஸ்) T. B. குஷ்டம், வெண் குஷ்டம்,
யானைக்கால் மற்றும் நாள்பட்ட கொடிய வியாதிகளுக்கும்,
டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளை அவர்களே
பிரதி ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளில் சென்னையிலும்
பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் கிளை வைத்தியசாலையிலும்
நோயாளிகளை நேரில் கவனித்து மருந்து கொடுக்கிறார்.


ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், சின்னகாஞ்சிபுரம்
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.